பாவங்களிலிருந்து! வியாதிகளிலிருந்து! பிரச்சனைகளிலிருந்து!

JESUS REDEEMS MINISTRIES

# இயேசு விடுவிக்கிறார்

மரம் : 39 கனி : 12 டிசம்பர் - 2018

சகோ. மோகன் சி. லாசரஸ்

## கிறிஸ்துமஸின் ஆசீர்வாதங்கள்...




## பெற்றுக் கொள்வது எப்படி?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள்
## சகோதரனிடமிருந்து...

**இ**யேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில், உங்களுக்கு என் அன்பின் **கிறிஸ்துமஸ் நல் வாழ்த்துக்கள்!**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தன் மகிமையைத் துறந்து, ஒரு ஏழ்மையின் கோலமெடுத்தது உங்களுக்காகத்தான்! 'கிறிஸ்துமஸ் பண்டிகை!' என்பது, ஒருநாள் புத்தாடை உடுத்தி, ஆலயத்திற்குப் போய் விட்டு வருவதல்ல. அதையும் தாண்டி, இந்தப் பண்டிகையின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வதுதான் கிறிஸ்துமஸ்!

"இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, நமக்கு தரும் ஆசீர்வாதங்கள் என்னென்ன?" என்பதைப் பற்றி செய்தியாக எழுத, கர்த்தர் எனக்குக் கிருபை செய்தார். அதை வாசித்து, அதற்காக **ஜெபித்து, ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்ளுங்கள்.**

நீங்கள் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வது மட்டுமல்ல, பண்டிகையின் சந்தோஷம்! நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடுக்க வேண்டும். அதுதான் உண்மையான பண்டிகையின் ஆசீர்வாதம்! சந்தோஷம்!

ஒவ்வொரு மாதமும் **கொழும்பு பட்டணத்தில்** நடைபெற்று வரும் **திறப்பின் வாசல் ஜெபத்தை தேவன் அற்புதமாக நடத்தி வருகிறார்.**

செவ்வாய் கிழமைதோறும் **திருகோணமலையில்** தேசத்திற்காக ஜெபிக்க **காலை 9:30** - மதியம் **2:00** மணிவரை சிறப்பு ஜெபம் நடைபெறுகிறது. கட்டாயமாக இந்த ஜெபத்தில் நீங்கள் கலந்து கொண்டு தேசத்திற்காக ஜெபிக்க அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இலங்கை தேசத்திலே நாம் செய்து வருகிற ஊழியங்களுக்காக ஜெபித்து, கொடுத்து தாங்கி வருகிற உங்களை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதிக்க **ஜெபிக்கிறேன்.**

கடந்த (2018) நவம்பர் மாத ஊழியங்களை எல்லாம் கர்த்தர் ஆசீர்வதித்தார். கர்த்தரை **துதியுங்கள்!** இந்த வருடத்தின் கடைசி மாதத்திற்குள் நாம் வந்திருக்கிறோம். இந்த வருடம் முழுவதும் **கர்த்தர் நம்மை நடத்தி வந்த விதத்தைத் திரும்பிப் பார்த்து, அவரைத் துதியுங்கள்!**

வர இருக்கிற புது வருடத்திற்காக **ஜெபித்து, ஆயத்தப்படுங்கள். முடிந்தால், ஒருநாள் உபவாசம் பண்ணி ஜெபியுங்கள்.**

இந்த (2018) டிசம்பர் மாதத்தில், **'அபுதாபி'**, **'கத்தார்'** என்கிற இரண்டு நாடுகளுக்கு ஊழியத்திற்காகச் செல்கிறேன். இந்த இரண்டு இடங்களிலும் எழுப்புதலுக்காக ஜெபிக்க இருக்கிறோம். **இந்த ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்!**

அடுத்த 2019ம் வருடத்தில், தமிழ்நாட்டிலும், இந்தியாவிலும், உலகத்தின் சில நாடுகளிலும் நான் செய்ய வேண்டிய ஊழியங்களை கர்த்தராகிய தேவன் திட்டம் பண்ணிக் கொடுத்திருக்கிறார். அவைகளை எல்லாம் அவருடைய சித்தத்தின்படியே செய்து முடிக்க, கர்த்தர் எனக்குக் கிருபை கொடுக்கும்படியாக **எனக்காக ஜெபியுங்கள்.**

**உங்களுக்காக,** உங்கள் **குடும்பத்தாருக்காக** நம் **ஜெபக் குழுவில் ஜெபிக்கிறோம்.** நீங்களும் **எனக்காக,** நம் **'இயேசு விடுவிக்கிறார்' ஊழியக் குடும்பத்திற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.**

நம் 'இயேசு விடுவிக்கிறார்' **ஊழியக் குடும்பத்தார்** உங்களுக்கு **கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களை கூறுகிறார்கள்!**

கிருபை உங்களோடிருப்பதாக!



உங்கள் சகோதரன்,

Mohan C L.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்துமஸின் ஆசீர்வாதங்கள்...




# பெற்றுக் கொள்வது எப்படி?

**"தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்,..."** 1 தீமோ. 3:16.

இதுதான் கிறிஸ்துமஸ்! அதாவது, வானத்தையும், பூமியையும் உண்டாக்கிய தேவன், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவர், காணக் கூடாதவர், நம்மைப்போல ஒரு சாதாரண மனிதனாக இந்த உலகத்தில் வந்தார்.

"(இயேசு கிறிஸ்து) **தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்.**

**அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம்,... கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்."** பிலி. 2:7,8.

அவர் நினைத்திருந்தால், ஒரு அரச குடும்பத்தில், ஒரு ராஜ குமாரனாக, ஒரு அரண்மனையில் பிறந்திருக்க முடியும்! ஆனால், அவர் ஒரு ஏழை தச்சனுடைய குடும்பத்தில், ஒரு ஏழ்மைக் கோலத்தில் அவதரித்தார்.

மகிமையின் தேவன், ஒரு சாதாரண மனிதனாக ஏன் இந்த உலகத்தில் அவதரிக்க வேண்டும்?

மனுக் குலத்தின் மீது, தான் வைத்த அன்பினால், மனிதர்களை பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும் விடுதலையாக்கி, அவர்களை ஆசீர்வதிக்கவே, அவர் இரட்சகராக இந்த உலகத்தில் பிறந்தார்.

ஆகவேதான், இந்த இயேசு கிறிஸ்துவின் நிமித்தம், இன்று உலகமே மகிழ்கிறது. எல்லா நாடுகளிலும், எல்லா பாஷைக்காரர்களும் கிறிஸ்து பிறப்பின் பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள்.

இயேசு கிறிஸ்து ஒரு குறிப்பிட்ட குடும்பத்திற்கோ, ஒரு குறிப்பிட்ட கிராமத்திற்கோ, ஒரு குறிப்பிட்ட ஜாதிக்கோ, ஒரு குறிப்பிட்ட மொழிக்கோ, ஒரு குறிப்பிட்ட நாட்டிற்கோ சொந்தமானவரல்ல! முழு உலகத்திற்கும் அவர் சொந்தமானவர்! ஆகவேதான், **"உலக இரட்சகர்!" (1 யோவான் 4:14)** என்று, இயேசு கிறிஸ்து அழைக்கப்படுகிறார்.

இதை வாசிக்கிற உங்களுக்கும் இயேசு கிறிஸ்துதான் இரட்சகர்! இயேசு கிறிஸ்து உங்களுக்காகப் பிறந்ததினால் உண்டான ஆசீர்வாதங்களை நீங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும். அதுதான் உண்மையான கிறிஸ்துமஸின் மகிழ்ச்சி! உங்களை ஆசீர்வதிக்கத்தான் அவர் மனிதனாக வந்தார். அந்த ஆசீர்வாதங்கள் என்ன? அவைகளை எப்படிப் பெற்றுக் கொள்வது? என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களை விடுவிக்க,

# இயேசு கிறிஸ்து அடிமையானார்!

"(இயேசு கிறிஸ்து) **தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்."** பிலி. 2:7.

தேவனுடைய ரூபமாயிருந்த இயேசு கிறிஸ்து, ஒரு அடிமையின் ரூபமெடுத்து, மனுஷ சாயலானார். அதாவது, மனுஷ ரூபமாய் காணப்பட்டு, சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். **(பிலி. 2:8).**

மனிதன் பாவத்திற்கும், சாபத்திற்கும் அடிமைப்பட்டு, பிசாசின் பிடியில் சிக்கி வேதனைப்பட்டுக் கொண்டிருந்தபடியினால், அந்த அடிமைத்தனத்திலிருந்து அவனை விடுதலையாக்கும்படி, இயேசு கிறிஸ்து அடிமையின் ரூபமெடுத்தார். மனுக் குலத்திற்கு விடுதலை கொடுப்பதற்காக, சிலுவையில் கட்டப்பட்டவராக, வானத்திற்கும், பூமிக்கும் நடுவாகத் தொங்கினார். அவர் சிலுவையில் சிந்திய இரத்தத்தின் மூலமாக மனுக் குலத்திற்கு விடுதலையை உண்டாக்கினார்.



> "அவர் (இயேசு கிறிஸ்து) தமது ஜனங்களின் **பாவங்களை நீக்கி** அவர்களை **இரட்சிப்பார்."**
> **மத்தேயு 1:21.**

"...**குமாரன்** (இயேசு கிறிஸ்து) **உங்களை விடுதலையாக்கினால், மெய்யாகவே விடுதலையாவீர்கள்."** யோவான் 8:36.

ஒருவேளை, இன்றைக்கு ஏதோ ஒரு பாவத்திற்கு நீங்கள் அடிமைப்பட்டிருக்கலாம்! ஏதோ ஒரு பாவ சுபாவம் உங்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கலாம்! மதுபானப் பழக்கம், புகை பிடிக்கும் பழக்கம், கோபம், எரிச்சல், இச்சைகள், பெருமை... என்று, ஏதோ ஒரு பாவம் உங்களை அடிமையாக்கி, உங்களை வேதனைப்படுத்திக் கொண்டிருக்கலாம்! உங்களுக்கு விடுதலையின் சந்தோஷத்தைக் கொடுப்பதற்காகத்தான், இயேசு கிறிஸ்து ஒரு அடிமையின் ரூபமெடுத்தார்.

எனக்கு ஒரு சகோதரியைத் தெரியும். மற்றவர்களோடு சண்டை போடுவதே அவர்களுடைய சுபாவம்! பக்கத்து வீட்டில் சண்டை! கடைக்குப் போகிற இடத்தில் சண்டை! தண்ணீர் எடுக்கிற இடத்தில் சண்டை!...என்று, இப்படி தினமும் யாரிடத்திலாவது சண்டை போடுவார்கள். அந்த சகோதரியினுடைய கணவருக்கு ஒரு பெரிய பிரச்சனை வந்தது. அதனால் குடும்ப சமாதானம் பாதிக்கப்பட்டது. "நான் செய்வது தவறு' என்று எனக்குத் தெரிகிறது. ஆனால், என்னை மாற்றிக் கொள்ள முடியவில்லையே!" என்று வருந்தினார்கள். அப்பொழுதுதான் ஒருவர் இயேசு கிறிஸ்துவைப் பற்றியும், அவர் கொடுக்கும் விடுதலையைப் பற்றியும் அவர்களுக்குச் சொன்னார். அவர்களும் விசுவாசத்தோடு இயேசு கிறிஸ்துவை தன் வாழ்க்கையில் ஏற்றுக் கொண்டு, தன் விடுதலைக்காக ஜெபித்தார்கள்.

இயேசு கிறிஸ்து, அவர்களுடைய பாவத்தை மன்னித்தது மாத்திரமல்ல, அந்தப் பாவ சுபாவத்திலிருந்து அவர்களுக்கு முழு விடுதலையையும் கொடுத்தார். அதோடு அவர்களுடைய சண்டை போடுகிற பழக்கம் மாறி, எல்லோரிடத்திலும் அன்பு காட்ட ஆரம்பித்தார்கள்.

இதற்குத்தான் இயேசு கிறிஸ்து அடிமையின் ரூபமெடுத்தார். இன்றைக்கு நீங்கள் எந்த விதமான அடிமைத்தனத்தில் இருக்கிறீர்கள்? எதுவாக இருந்தாலும், அந்தக் காரியத்திலிருந்து, **இயேசு கிறிஸ்து உங்களை விடுதலையாக்குவார்.**

"உங்களுக்கு விடுதலை கொடுக்கத்தான் இயேசு கிறிஸ்து அடிமையின் ரூபமெடுத்தார்." என்று **விசுவாசியுங்கள்.**

"இயேசுவே, எனக்கு விடுதலை கொடுப்பதற்காக, நீர் அடிமையின் ரூபமெடுத்தீரே, அதை விசுவாசிக்கிறேன்! எனக்காக சிலுவையில் இரத்தம் சிந்தினீரே, அதை விசுவாசிக்கிறேன்! இப்பொழுது எனக்கு இந்தப் பாவத்திலிருந்து, இந்தப் பாவப் பழக்கத்திலிருந்து விடுதலை கொடுப்பீராக! விடுதலையின் தேவனாக நீர் எனக்குள் வாசம் பண்ணுவீராக! ஆமென்! ஆமென்!"

என்று, **விசுவாசத்தோடு** உங்கள் விடுதலைக்காக ஜெபியுங்கள். **விடுதலையைப் பெற்றுக் கொள்ளும்வரை ஜெபியுங்கள்! இன்று விடுதலையாவீர்கள்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களை உயர்த்த,
# இயேசு கிறிஸ்து தன்னைத் தாழ்த்தினார்!

**"இயேசு மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்."** பிலி. 2:8.

வானாதி வானங்களும் கொள்ளாத, சர்வ வல்லமையுள்ள தேவன், ஒரு சாதாரண மனுஷ ரூபமெடுத்து, தம்மைத் தாமே தாழ்த்தினார். ஏன் அவர் தன்னைத் தாழ்த்தினார்? நம்மை உயர்த்த, தன்னை இயேசு கிறிஸ்து தாழ்த்தினார்.

இங்கிலாந்து தேசத்தில், விக்டோரியா மகாராணியின் ஆட்சிக் காலத்தில், அடுத்து ராஜாவாக முடி சூட்டப்பட வேண்டிய இளவரசர், ஒரு ஏழைப் பெண்ணை நேசித்தார். அந்த ஏழைப் பெண்ணைத்தான் திருமணம் செய்து கொள்ளப் போவதாக அவர் கூறினார். ராஜ குடும்பத்தார், அதை ஏற்றுக் கொள்ளவில்லை. "ஒரு இளவரசன், ராஜ குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணைத்தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் ராஜாவாக முடி சூட்டப்பட முடியும்." என்றார்கள்.

"ராஜ மேன்மையை நான் இழந்து போனாலும் பரவாயில்லை. நான் நேசிக்கும் அந்த ஏழைப் பெண்ணைத்தான் திருமணம் செய்வேன்." என்று அந்த இளவரசர் உறுதியாக இருந்தார். பலர் வந்து பேசியும், அவர் மனம் மாறவில்லை. கடைசியில் அந்த இளவரசர், தான் நேசித்த அந்த ஏழைப் பெண்ணுக்காக, தன் ராஜ மேன்மையையே விட்டுக் கொடுத்தார். அந்த ஏழைப் பெண்ணையே மணந்து கொண்டார்.



"...குமாரன் [இயேசு கிறிஸ்து] உங்களை விடுதலையாக்கினால், மெய்யாகவே **விடுதலையாவீர்கள்."** யோவான் 8:36.

இப்படித்தான் இயேசு கிறிஸ்துவும், நமக்காக தன் பரலோக மேன்மையை விட்டுக் கொடுத்தார். அந்த ஏழைப் பெண் இளவரசரை மணந்தபடியினால், ராஜ குடும்பத்தைச் சார்ந்த பெண்ணாக உயர்த்தப்பட்டாள். இப்படித்தான் இயேசு கிறிஸ்துவின் மூலம், **"நான் தேவனுடைய பிள்ளை!"** என்கிற உயர்வை நாம் பெற்றுக் கொள்கிறோம். **(யோவான் 1:12).**

அது மாத்திரமல்ல, நீங்கள் படித்துக் கொண்டிருந்தால், படிப்பிலே நீங்கள் உயர்த்தப்படுவீர்கள்! வேலை செய்து கொண்டிருந்தால், வேலையில் நீங்கள் உயர்த்தப்படுவீர்கள்! வியாபாரம் செய்து கொண்டிருந்தால், உங்கள் வியாபாரத்தில் உயர்த்தப்படுவீர்கள்! சமுதாயத்தில் நீங்கள் உயர்த்தப்படுவீர்கள்!

உங்களை உயர்த்தத்தான் இயேசு கிறிஸ்து தன்னைத் தாழ்த்தினார். அதை விசுவாசியுங்கள்! **விசுவாசித்து, உங்கள் உயர்வை சுதந்தரித்துக் கொள்ளுங்கள்!**

"இயேசுவே! என்னை உயர்த்த உம்மைத் தாழ்த்தினீரே, உமக்கு ஸ்தோத்திரம்! எனக்காகத்தான் நீர் உம்மைத் தாழ்த்தினீர் என்று விசுவாசிக்கிறேன்! எனக்காக உம்மைத் தாழ்த்தியபடியினால், என்னை உயர்த்தியருளும்!" என்று **விசுவாசத்தோடு ஜெபியுங்கள்.** உயர்வைக் காணும்வரை ஜெபியுங்கள். **நீங்கள் உயர்த்தப்படுவீர்கள்!**

# உங்களை ஐசுவரியவான்களாக்க,
# இயேசு கிறிஸ்து தரித்திரரானார்!

**"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள்நிமித்தம் தரித்திரரானாரே."** 2 கொரி. 8:9.

"இயேசு கிறிஸ்து ஏழைக் கடவுள். அவரை நம்புகிறவர்களும் ஏழைகளாகத்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பார்கள்" என்று, சிலர் தவறாக எண்ணுகிறார்கள். இயேசு கிறிஸ்து ஏழைக் கடவுள் அல்ல, அவர் ஐசுவரியமுள்ள தேவன்!

**"வெள்ளியும் என்னுடையது, பொன்னும் என்னுடையது என்று...கர்த்தர் சொல்லுகிறார்." ஆகாய் 2:8.**

**"பூமியும் அதின் நிறைவும்,.... கர்த்தருடையது."** (சங்கீதம் **24:1**) என்று, பரிசுத்த வேதாகமம் கூறுகிறது.

வானத்தையும், பூமியையும் உண்டாக்கிய ஐசுவரியமுள்ள தேவன், இந்த உலகத்தில் ஒரு மனிதனாக அவதரித்தபோது, ஒரு ஏழை தச்சனுடைய குடும்பத்தில் பிறந்தார். அவர் பிறப்பதற்கு, ஒரு சத்திரத்தில் கூட இடமில்லாமல், ஒரு மாட்டுத் தொழுவத்தில்தான் அவதரித்தார். அவர் நினைத்திருந்தால், ஒரு ராஜ குடும்பத்தில், அரண்மனையில் அவதரித்திருக்கலாம்! அல்லது ஒரு பணக்காரக் குடும்பத்தில், பணக்காரக் குழந்தையாகப் பிறந்திருக்கலாம்!



"அவர் [இயேசு கிறிஸ்து] ...சிலுவையின் மரணபரியந்தமும்... தம்மைத்தாமே தாழ்த்தினார்."
பிலிப்பியர் 2:8.

ஆனால் அவரோ, ஒரு ஏழைக் குடும்பத்தில், ஏழையாகவே அவதரித்தார். எதற்காக?

**நம்முடைய தரித்திரத்தை மாற்றி, நம்மை ஐசுவரியவான்களாக்கும்படி, நமக்காகவே அவர் தரித்திரரானார்.**

ஒருவேளை, இன்றைக்கு நீங்கள் தரித்திர நிலையில், கடன் பிரச்சனையில், வறுமையில் கலங்கிக் கொண்டிருக்கிறீர்களா? உங்களுக்காகத்தான் இயேசு கிறிஸ்து தரித்திரரானார்.

அவர் ஏழ்மைக் கோலம் எடுத்ததே, உங்கள் ஏழ்மையை மாற்றி, உங்களை ஆசீர்வதிக்கத்தான்!

ஒரு ஏழை விதவைத் தாய், தன் மகனை நல்ல ஒரு பள்ளிக்கூடத்தில் படிக்க வைத்தார்கள். வீடு வீடாகச் சென்று, வீட்டு வேலைகளைச் செய்து, தன் மகனுக்கு நல்ல உடைகள் வாங்கிக் கொடுத்தார்கள்.

பெரிய ஒரு பணக்கார வீட்டுப் பிள்ளையைப்போல, தன் மகனைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினார்கள். அவன் கேட்பதையெல்லாம் வாங்கிக் கொடுத்தார்கள்.

தன் மகனுக்கு விதவிதமான உடைகளை வாங்கிக் கொடுத்த அந்தத் தாய், தனக்கென்று ஒரே ஒரு சேலைதான் வைத்திருந்தார்கள். அதைத்தான் துவைத்து, துவைத்து உடுத்துவார்கள். அது பல இடங்களில் கிழிந்து, கந்தலாகக் காணப்பட்டது.

ஒரு கிறிஸ்துமஸ் பண்டிகை நாளன்று, அந்தத் தாய், தன் மகன் விரும்பிய அதிக விலையுள்ள புத்தாடையை வாங்கிக் கொண்டு வந்து, தன் மகனிடத்தில் கொடுத்தார்கள்.

அதைப் பார்த்ததும், அவன் மகிழ்ச்சியடைந்தான். ஆனால், தன் தாயின் கிழிந்து போயிருந்த சேலையைப் பார்த்து, "அம்மா, எனக்கே எல்லாம் வாங்கித் தருகிறீர்கள். உங்களுக்காக ஏன் ஒரு புதுச் சேலை வாங்கிக் கொள்ளக் கூடாது?" என்றான் துக்கத்தோடு.

"நான் கூலி வேலை செய்து சம்பாதிக்கிற பணத்தில், உனக்கு உடுத்துவித்து, உன்னை அழகு பார்ப்பதே எனக்குச் சந்தோஷம். உனக்காகத்தான் நான் என்னை ஏழ்மையாக்கிக் கொண்டேன்." என்று, அந்தத் தாய் சொன்னபோது, தன் தாயின் அன்பை உணர்ந்தவனாய், அந்தத் தாயை அணைத்துக் கொண்டான்.

இப்படித்தான் இயேசு கிறிஸ்துவும், நமக்காக, நம்மை ஐசுவரியவான்களாக்க, தன்னையே ஏழ்மையாக்கிக் கொண்டார். இதை **விசுவாசித்து ஜெபித்தால்,** உங்கள் பணப் பிரச்சனை எல்லாம் மாறும்படி, **கர்த்தர் அற்புதம் செய்வார்.** விசுவாசத்தோடு **ஜெபியுங்கள்:**

"ராஜாதி ராஜாவே, எனக்காக நீர் ஏழ்மைக் கோலமெடுத்ததற்காக, உமக்கு ஸ்தோத்திரம்!

என்னை ஐசுவரியவானாக்க நீர் தரித்திரர் ஆனதை நான் விசுவாசிக்கிறேன்! நீர் எனக்காக தரித்திரர் ஆனபடியினால், என்னை ஆசீர்வதியும்! என் கடன் பிரச்சனைகளை மாற்றும்! என் வறுமை நீங்கட்டும்! என்னை ஆசீர்வதித்து, பெருகப் பண்ணும்! இயேசுவின் நாமத்தில்...ஆமென்! ஆமென்!"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களை நிறைவாக்க,
# இயேசு கிறிஸ்து தன்னையே வெறுமையாக்கினார்!

"(இயேசு கிறிஸ்து) தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்." பிலி. 2:7.

இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் ஒரு மனிதனாக வந்தபோது, தம்மைத்தாமே வெறுமையாக்கினார். நம்முடைய குறைவுகளை மாற்றி, நம்மை நிறைவாக்க, நமக்காகவே அவர் தம்மை வெறுமையாக்கினார்.

இன்று உங்கள் வாழ்க்கையில் என்ன குறைவு காணப்படுகிறது?

படிப்பிற்கு வேண்டிய ஞானத்தில் குறைவு! ஞாபக சக்தியில் குறைவு! வியாதியினால் ஆரோக்கியக் குறைவு! "வேலை இல்லை!" என்கிற குறைவு! "சொந்த வீடு இல்லை!" என்கிற குறைவு! "குழந்தை இல்லை!" என்கிற குறைவு!... என்று, இன்னும் எதிலே குறைவுடையவர்களாக இருக்கிறீர்கள்?

எந்தக் குறைவாக இருந்தாலும், **உங்கள் குறைவை நிறைவாக்கத்தான் இயேசு கிறிஸ்து தன்னையே வெறுமையாக்கினார்** என்று **விசுவாசியுங்கள்!**

எனக்கு ஒரு ஊழியக்காரரைத் தெரியும். கஷ்டப்பட்டு, பல குறைவுகளோடு ஊழியம் செய்து வந்தார். "இப்படிக் குறைவுகளோடும், பாடுகளோடும் ஊழியம் செய்வதுதான் உண்மையான ஊழியம். இயேசு கிறிஸ்துவும் கூட தனக்கென்று ஒன்றுமில்லாமல்தான் ஊழியம் செய்தார்." என்று, குறைவுகள் மத்தியிலும் திருப்தியாக இருந்தார்.

அப்போதுதான் ஒரு சமயம், கர்த்தர் அவரிடத்தில், "நான் என்னை வெறுமையாக்கியது, உன் குறைவை நிறைவாக்கத்தான். நீ குறைவுகளோடு கஷ்டப்படுவது என் விருப்பமல்ல. நான் உன் குறைவுகளை நிறைவாக்குவேன்." என்று பேசி, அவருக்கு விளங்கப் பண்ணினார்.

அப்பொழுது அவருக்குள் விசுவாசம் வந்தது. "இயேசுவே, என் குறைவுகளை மாற்ற உம்மை வெறுமையாக்கினீர் என்பதை நான் விசுவாசிக்கிறேன்!" என்று ஜெபிக்க ஆரம்பித்தார். ஜெபிக்க, ஜெபிக்க, குறைவுகள் நீங்கியது. நிறைவான ஆசீர்வாதம் அவருக்கு உண்டாயிற்று.

உங்கள் வாழ்க்கையிலும், ஏதோ ஒரு குறைவினால் நீங்கள் கலங்கிக் கொண்டிருக்கலாம்! **இயேசு கிறிஸ்து உங்களுக்காக தம்மை வெறுமையாக்கினார் என்பதை விசுவாசியுங்கள்.**

**"இயேசுவே, எனக்காக, என் குறைவை நிறைவாக்க நீர் வெறுமையானீர் என்பதை நான் விசுவாசிக்கிறேன். இன்று, என் குறைவுகள் இயேசுவின் நாமத்தினால் நிறைவாகட்டும்! விசுவாசத்தோடு, நிறைவான ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்கிறேன்!" என்று விசுவாசத்தோடு ஜெபியுங்கள், அற்புத மாற்றத்தைக் காண்பீர்கள்.**

'கிறிஸ்துமஸ்' என்றால், வெறும் கொண்டாட்டம் மட்டுமல்ல, கிறிஸ்துமஸின் ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக் கொள்ள வேண்டும். நம்மை ஆசீர்வதிக்கத்தான் இயேசு கிறிஸ்து இந்தப் பூமியில் அவதரித்தார்.

இந்த ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக் கொள்வது மாத்திரமல்ல, **மற்றவர்களும் இந்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள, நாம் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்.** இதுதான் கிறிஸ்துமஸின் உண்மையான சந்தோஷம்! கிறிஸ்துமஸின் ஆசீர்வாதங்களையும், மகிழ்ச்சியையும் பெற்றுக் கொள்ள, கர்த்தர் உங்களுக்குக் கிருபை தருவாராக!

இந்த ஜெபத்தை விசுவாசத்தோடு ஏறெடுங்கள்:

**மாம்சத்தில் வெளிப்பட்ட தேவனே, உமக்கு ஸ்தோத்திரம்! எனக்காக ஒரு மனிதனாக நீர் இந்த பூமியில் அவதரித்ததற்காக, உமக்கு ஸ்தோத்திரம்! என்னுடைய ஆசீர்வாதத்திற்காக, நீர் செய்த காரியங்களுக்காக, உமக்கு ஸ்தோத்திரம்!**

**என்னை உயர்த்த உம்மைத் தாழ்த்தினீரே, உமக்கு ஸ்தோத்திரம்! என்னை உயர்த்தி மேன்மைப்படுத்துகிறதற்காக, உமக்கு ஸ்தோத்திரம்! எனக்கு விடுதலை கொடுக்க, நீர் அடிமையின் ரூபமெடுத்ததற்காக, உமக்கு ஸ்தோத்திரம்! இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எனக்கு விடுதலை உண்டாவதாக! என்னை ஐசுவரியவானாக்க, நீர் தரித்திரரானீரே, உமக்கு ஸ்தோத்திரம்! என் வறுமை, தரித்திரமெல்லாம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஒழியட்டும்!**

**எனக்காக, என்னை ஆசீர்வதிக்க, நீர் இந்த உலகில் ஒரு மனிதனானீரே, உமக்கு ஸ்தோத்திரம்!**

**உம்மை விசுவாசிக்கிறேன்! உமக்காக என்னை அர்ப்பணிக்கிறேன்! இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அற்புதங்களை எதிர்பார்க்கிறேன்! ஆமென்! ஆமென்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இயேசுவும், நானும்!



*Jesus & Myself!*

கடந்த (2018) அக்டோபர் மாத இதழில், "நமது சகோதரர் மோகன் சி. லாசரஸ் அவர்கள் எத்தனையோ பல படிகளைத் தாண்டி, இன்றைக்கு அனேகருக்கு ஆசீர்வாதமாக இருக்கிறார்கள் என்று சொன்னால், அவர்களுடைய துணைவியார் திருமதி ஜாய்ஸ் லாசரஸ் அவர்களுக்கு அதில் பெரும் பங்கு இருக்கிறது.

சகோதரர் அவர்களிடத்தில், அவர்களுடைய வாழ்க்கைப் பயணத்தில், திருமதி ஜாய்ஸ் லாசரஸ் அவர்களை கரம் பிடித்த, அந்த ஆரம்ப நாட்களைப் பற்றிப் பகிர்ந்து கொள்ளும்படியாகக் கேட்டுக் கொண்டபோது...

"...அந்த சூழ்நிலையில், 'திருமணம்' என்று வந்தபோது, அதிலாவது, வசதியான நல்ல ஒரு இடத்தில் பெண் பார்த்து எனக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று என் பெற்றோர் எண்ணினார்கள். 'ஏன்?' என்று கேட்டால், அதில் எங்களுடைய உறவினர்கள் எல்லோரும் சம்பந்தப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் திருமணத்திற்கு வருவார்கள். ஆகவே, "அதிலாவது நமக்கு ஒரு மதிப்பு, மரியாதை எல்லாம் இருக்க வேண்டும்." என்று என் பெற்றோர் எண்ணினார்கள்." என்று சொன்னதாக வாசித்து முடித்திருப்பீர்கள்.

**இதோ, அதன் தொடர்ச்சி...**

ஆகவே, "உடனே உனக்கு திருமணம் செய்ய வேண்டும்." என்றார்கள். அப்போது எனக்கு 25 வயதுதான் ஆகி இருந்தது. எனவே, "இப்பொழுது எனக்கு திருமணம் வேண்டாம். இன்னும் 2, 3 வருடங்கள் ஆகட்டும்." என்று என் பெற்றோரிடத்தில் சொன்னேன்.

ஆனால் அவர்கள் அதை ஏற்றுக் கொள்வதாக இல்லை. சில நாட்களுக்குள்ளாக அவர்கள் பெண் பார்த்து விட்டு வந்து, "உனக்கு ஒரு பெண் பார்த்து விட்டு வந்திருக்கிறோம். நல்ல வசதியான, பிரபலமான குடும்பம். உடனே திருமணம் செய்ய வேண்டும்." என்று சொன்னார்கள்.

அந்த சமயத்தில், "இப்போதைக்கு திருமணம் செய்து கொள்ள வேண்டாம்." என்கிற எண்ணம்தான், முதலாவது என் மனதிற்குள் இருந்தது. இரண்டாவது, "பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணை திருமணம் செய்யக் கூடாது. ஒரு ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த, என்னோடு ஊழியத்தில் இணைந்து போகக் கூடிய ஒரு பெண்ணைத்தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும்." என்றுதான் நான் நினைத்துக் கொண்டு இருந்தேன்.

ஆகவே, "இப்போதைக்கு எனக்கு திருமணம் வேண்டாம்." என்றுதான் நான் சொல்லிக் கொண்டு இருந்தேன். ஆனால் என் பெற்றோர், "இந்தக் குடும்பத்தில் திருமணம் செய்தால், இந்த ஊருக்கெல்லாம் தெரியும்! நல்ல ஒரு குடும்பம்! 'நல்ல ஒரு வசதியான குடும்பத்தில் திருமணம் செய்திருக்கிறார்கள்!" என்று உறவினர்கள் எல்லோரும் சொல்வார்கள்." என்று, சில மாதங்களாக சொல்லிக் கொண்டே இருந்தார்கள்.

ஆனால் நானோ, "முடியாது!" என்று சொல்லிக் கொண்டிருந்தேன். இதன் நிமித்தமாக, எங்கள் வீட்டிற்குள் ஒரு பெரிய போராட்டமே வந்தது. என் தகப்பனார், "நீ இதற்குச் சம்மதிக்கவில்லை என்றால், நான் செத்துப் போய் விடுவேன்!" என்று சொல்லி என்னை மிரட்டினார்கள்.

என் உறவினர்கள், "அப்பா, அம்மா சொல்கிற மாதிரி செய்ய வேண்டியதுதானே! இயேசு கிறிஸ்து இப்படியா சொல்லி இருக்கிறார்? தாய்-தகப்பனுடைய வார்த்தைக்குக் கீழ்படியாமல் அப்படி என்னதான் நீ ஊழியம் செய்கிறாய்?" என்று எல்லோரும் பேச ஆரம்பித்தார்கள்.

எனக்கு ஒரு பெரிய போராட்டமான சூழ்நிலையாகி விட்டது! அது, என்னுடைய ஊழியத்தின் ஆரம்பக் காலம். அப்பொழுது நான் தேவ சமூகத்தில் போய் அமர்ந்து, மிகுந்த பாரத்தோடு ஜெபித்தேன். அப்பொழுது கர்த்தருடைய ஆவியானவர் என்னோடு இடைப்பட்டு, "ஆவிக்குரிய காரியத்தைப் பற்றி உன் பெற்றோரால் அறிந்து கொள்ள முடியாது. உன் திருமணக் காரியத்தை அவர்களுடைய விருப்பத்திற்கே விட்டு விடு. அதில் என்னுடைய சித்தத்தை நிறைவேற்றுவேன்." என்று மிகத் தெளிவாகப் பேசினார்.

இப்படியாக கர்த்தர் என்னோடு பேசியபடியினால், அவருடைய வார்த்தைக்குக் கீழ்படிந்து, என் பெற்றோரின் விருப்பத்திற்கு நான் சம்மதித்தேன். ஆனாலும் நான், "வரதட்சணை கேட்கக் கூடாது. அவர்களுக்கு என்ன செய்ய விருப்பம் இருக்கிறதோ, அதைச் செய்யட்டும்." என்று என் பெற்றோரிடம் சொன்னேன். அதற்கு அவர்களும் ஒத்துக் கொண்டார்கள்.

"நீ சம்மதித்து விடு. அதில் என் சித்தத்தை நிறைவேற்றுவேன்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று, கர்த்தர் என்னிடத்தில் சொன்ன வார்த்தைக்காக, நான் ஒன்றும் பார்க்கவே இல்லை. என் திருமணத்திற்கு முன்பு வரை, எனக்கு மனைவியாக வரப் போகிற பெண்ணின் புகைப் படத்தைக் கூட நான் பார்த்ததில்லை.

**"வருங்கால மனைவி எப்படி இருப்பாள் என்று பார்க்க வேண்டும்!' என்று, சின்ன ஒரு ஆசை கூட உங்களுக்கு வரவில்லையா?" என்று, நமது சகோதரர் அவர்களிடத்தில் கேட்டபோது...**

என் உள்ளத்திற்குள் முதலில் அப்படி ஒரு எண்ணம் இருக்கத்தான் செய்தது. ஆனால், ஊழியத்திற்கு ஒப்புக் கொடுத்து வந்த பிறகு, நம்முடைய ஆசைகளையும், விருப்பங்களையும் தேவ சித்தத்திற்குக் கீழ்படுத்தினால்தான், கர்த்தர் நம்மோடு இடைபட முடியும் என்பதை நான் அறிந்திருந்தேன்.

அதன்படி, அவர் என்ன சொல்கிறாரோ, அதை நாம் செய்ய வேண்டும். அவர் நம்மிடத்தில், "உனக்குப் பிரியமானது என்ன?" என்று கேட்டால், நாமே அவரிடத்தில் எல்லாவற்றையும் சொல்லி விடலாம். நான் இந்தப் பிரச்சனையைக் கொண்டு போனபோது, "நீ விட்டு விடு..." என்று சொல்லி விட்டார். அவ்வளவுதான்! கர்த்தர் அப்படிச் சொன்ன பிறகு, அதற்கு மேல் எனக்கு வேறு நினைவுகள் வரவில்லை. என்னை முழுமையாக ஒப்புக் கொடுத்து விட்டேன். 1979 ஏப்ரல் 29ம் தேதியன்று எங்களுடைய திருமணம் நடந்தது.



**சகோதரி ஜாய்ஸ் லாசரஸ் அவர்களிடத்தில், "மூக்குப்பீறி உங்களுடைய சொந்த ஊர் இல்லையா? உங்கள் வீட்டில் நீங்கள் எத்தனை பேர்? உங்கள் பெற்றோர் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? உங்கள் குடும்பத்தைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கள்." என்று கேட்டுக் கொண்டபோது...**

என்னுடைய தகப்பனார் நாசரேத்தில் நகை வியாபாரம் செய்தார். என் தாயார் வீட்டில்தான் இருந்தார்கள். என்னுடன் பிறந்தவர்கள், 12 பேர். (6 பெண் பிள்ளைகள், 6 ஆண் பிள்ளைகள்). நான் 2வது பிள்ளையாகப் பிறந்தேன். பெண் பிள்ளைகளில் நான்தான் மூத்தவள்.

**உங்கள் இளமைப் பருவத்தில், வரப் போகிற வாழ்க்கைத் துணையைப் பற்றி பலவிதமான கனவெல்லாம் உங்களுக்குள் இருந்திருக்கும் அல்லவா? நீங்கள், "இப்படியாக ஒரு ஊழியக்காரரைத் திருமணம் செய்வோம்." என்று என்றைக்காவது நினைத்துப் பார்த்ததுண்டா?" என்று கேட்டபோது...**

நான் அப்படி எல்லாம் நினைத்துப் பார்த்ததில்லை. அது, தேவனுடைய பெரிய திட்டம். அது கர்த்தருடைய செயலாக இருந்திருக்கிறது. என்னுடைய வாழ்க்கையில் அவருடைய நோக்கம் நிறைவேறி இருக்கிறது, அவ்வளவுதான்! எங்கள் வீட்டில் எனக்கு வரன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது கூட சகோதரர் அவர்களுடைய புகைப் படத்தை நான் பார்க்கவில்லை! நாங்கள் 2 பேருமே ஒருவருக்கொருவர் புகைப் படத்தில் கூட பார்த்துக் கொண்டதில்லை. என் தாயார் என்னிடத்தில் பேசினார்கள். ஆகவே நான் திருமணத்திற்குச் சம்மதித்தேன்.

**"உங்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கை எப்படி இருந்தது? கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுடனான உங்கள் தொடர்பு எப்படி இருந்தது?" என்று கேட்டபோது...**

என்னுடைய வாலிப நாட்களிலேயே நான் கர்த்தருக்கென்று என்னை ஒப்புக் கொடுத்திருந்தேன். தினந்தோறும் வேதாகமத்தை வாசித்து, ஜெபிப்பேன். வாரத்தில் ஒருநாள் உபவாசம் இருந்து ஜெபிப்பேன். என்னுடைய எதிர்காலத்திற்காகவும் கர்த்தருடைய சமூகத்தில் அமர்ந்து ஜெபித்தேன். அந்த நாட்களில், "கர்த்தருக்காக ஏதாவது ஊழியம் செய்ய வேண்டும்." என்கிற ஒரு வாஞ்சையும் எனக்குள் இருந்தது.

**"நீங்கள் திருமணம் செய்து வந்த பிறகு, உங்களுடைய இல்லற வாழ்க்கை எப்படித் தொடங்கியது? 'கணவர் ஒரு ஊழியக்காரர்!' என்று நீங்கள் அறிந்து கொண்ட பிறகு, அந்த சமயத்தில் உங்கள் மனதிற்குள் என்னென்ன எண்ணங்கள் தோன்றியது? அதைப் பற்றிச் சொல்லுங்கள்." என்று கேட்டபோது...**

'கணவர் ஒரு ஊழியக்காரராக இருக்கிறபடியினால், அவர்களோடு கூட ஊழியத்தில் ஒத்துழைக்க வேண்டும். கடைசி வரைக்கும் அவர்களுக்கு உதவியாக இருக்க வேண்டும். அவர்களோடு இணைந்து கர்த்தருக்காக உழைக்க வேண்டும்." என்கிற ஒரு எண்ணம்தான் என் மனதிற்குள் இருந்தது.

- தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவ தரிசனம் நிறைவேறுகிறது!



## 'இயேசு விடுவிக்கிறார்'-மிஷனெரி ஊழியம்!

**க**ர்த்தருடைய வழி நடத்துதலின்படியே, கடந்த 1987ம் ஆண்டுமுதல், இன்றுவரை, ஏராளமான மிஷனெரிப் பணிகளை நிறைவேற்றி வருகிறோம்.

மிஷனெரிகளையும், ஆதிவாசி இனக் குழந்தைகளையும் **ஜெபத்தினாலும், பொருளுதவியினாலும் தாங்கி**, கல்வியிலும், சமுதாயத்திலும் அவர்கள் முன்னேற உதவி செய்து, **வேதாகமங்கள்** வாங்கிக் கொடுத்து, **ஆலயங்களைக் கட்டிக் கொடுத்து**, ஊழியத்திற்குத் தேவையான **உபகரணங்கள், சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள், 4 சக்கர வாகனங்கள், ஒலி பெருக்கிக் கருவிகள்** மற்றும் **வீடியோ புரொஜெக்டர்கள்** வாங்கிக் கொடுத்து, மிஷனெரிகளை உற்சாகப்படுத்தி, மிகுந்த ஜெபத்தோடு ஊழியங்களை நிறைவேற்றி வருகிறோம்.

## தமிழகக் கிராமங்களுக்கு சுவிசேஷம்!

தமிழ்நாட்டிலுள்ள சுமார் **22,000 கிராமங்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க, 500 மிஷனெரி**களை அனுப்பத் திட்டமிட்டு, இதுவரை **200** மிஷனெரிகளை அனுப்பியுள்ளோம். **'கிராம மிஷனெரி இயக்கம்'** (VMM) மூலமாக செயல்பட்டு வருகிற இந்த மிஷனெரிகள் மூலமாக ஏராளமான கிராமங்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, திரளான ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டு வருகிறார்கள்.

ஒவ்வொரு மாதமும் ₹ **1,000/-** கொடுத்து, இந்த மிஷனெரிகளைத் தாங்கி வருகிற உங்களைப் போன்ற பங்காளர்களைக் கொண்டுதான், இந்த ஊழியம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. மேலும், மாதந்தோறும் லட்சக்கணக்கான சுவிசேஷக் **கைப் பிரதிகளும்** அச்சடித்து, இந்த ஊழியத்தில் பயன்படுத்தி வருகிறோம்.



தெருக்களில்...



50 மிஷனெரிகள் பிரதிஷ்டை (ஆகஸ்ட் - 2018)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 40 ஆண்டுகள்
## ஊழிய நிறைவு திட்டங்களில்...




மிஷனெரிப் பிரதிஷ்டையும், ஜெபமும்


ஆலயம் கட்ட நிதி உதவி வழங்கல்


மிஷனெரிகளுக்கு சிறப்புப் பரிசு


நாம் தாங்கும் ஆதிவாசிக் குழந்தைகள்


குழந்தைகளுக்குப் பரிசு


சுவிசேஷ ரதம்

நமது **'இயேசு விடுவிக்கிறார்'** ஊழியங்கள் ஆரம்பிக்கப்பட்டு, **40 ஆண்டுகள் நிறைவடைந்ததை** முன்னிட்டு, கர்த்தர் தந்த திட்டத்தின்படி, **40 மிஷனெரிகள்** மற்றும் **40 ஆதிவாசி இனக் குழந்தைகளைத்** தாங்கவும், **40 ஆலயங்கள் கட்டிக் கொடுக்கவும், 40 மோட்டார் சைக்கிள்கள் வாங்கிக் கொடுக்கவும்** தீர்மானிக்கப்பட்டு, கடந்த (2018) செப். 29ம் தேதி நாலுமாவடியில் நடைபெற்ற **40 வருட நிறைவு ஸ்தோத்திர ஜெபத்தில்** முதல் கட்டமாக, 57 ஸ்தாபனங்களைச் சேர்ந்த **47 மிஷனெரிகளும், 30 ஆதிவாசி இனக் குழந்தைகளும்** ஜெபித்து, பிரதிஷ்டை செய்யப்பட்டனர். மேலும் **16 ஆலயங்கள், 26 மோட்டார் சைக்கிள்**கள் மற்றும் **8 சைக்கிள்**களுக்குமான மொத்தப் பணத் தொகை ₹ **59,47,000/-**மும், சிறப்பு **அன்பளிப்பு**களும் வழங்கப்பட்டது. மிஷனெரிகளைத் தாங்கும் பங்காளர்களுக்காக சிறப்புப் பிரார்த்தனை ஏறெடுக்கப்பட்டது. தமிழ்நாட்டிலுள்ள கிராமங்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க, **2 பெரிய வாகனங்கள் (Gospel Chariot)** வாங்கப்பட்டு, பிரதிஷ்டை செய்யப்பட்டது.

பங்காளர்களும், தேவ பிள்ளைகளும் ஜெபிக்கும் காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குஜராத்-'ஷாலோம்' ஊழியர்கள் குடும்பக் கூடுகை!



கடந்த (2018) அக். 8ம் தேதிமுதல், 11ம் தேதிவரை, **'ஷாலோம்'** மிஷனெரி ஸ்தாபனத்தில் பணியாற்றுகிற சுமார் **700க்கும்** அதிகமான **ஊழியர்களுக்கான குடும்பக் கூடுகை**, குஜராத் மாநிலம்-'பரூச்' நகரில் உள்ள **Spiritual Life Centre**ல் வைத்து நடைபெற்றது.

குஜராத், இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இருந்து வந்திருந்த **மிஷனெரிகள்** மற்றும் குடும்பத்தினரை, **Pr. ரந்தீப் மேத்யூ** அவர்கள் குழுவினர், பாடல்-ஆராதனைகள் மூலமாக தேவ பிரசன்னத்திற்குள் வழி நடத்தினார்கள். நமது சகோதரர் **மோகன் சி. லாசரஸ், Rev. டேவிட் பிரகாசம் (கோவை)**, பிஷப் V. **தேவதாஸ்**, சகோதரி **வஹிதா** தேவதாஸ், சகோ. **S. சாம் ஜெபராஜ்**, சகோ. **R. ஜெபசிங்**, **Pr. ஸ்டீபன் ஜோசுவா, Pr. ஞானசேகரன்** ஆகியோர் கர்த்தருடைய வார்த்தைகளைப் பகிர்ந்து கொண்டு ஜெபங்களை ஏறெடுத்தார்கள். குறிப்பாக 17ம் தேதி இரவு நடைபெற்ற 'சந்தியா' வேளையில், நமது சகோதரர் அவர்கள் எழுப்புதலைக் குறித்து தேவ செய்தியளித்து ஜெபித்தபோது, அனைவரும் புதிய வல்லமையையும், புதிய தரிசனத்தையும், எழுப்புதலுக்கான வைராக்கியத்தையும் பெற்றுக் கொண்டனர். முன்னதாக சிறப்பு விருந்தினர்களுக்கு கலாச்சார வரவேற்பு கொடுக்கப்பட்டது. ஊழியர்களின் கலாச்சார நடனம், **'எலியா'** மற்றும் **'எலிசா'** போன்ற தீர்க்கதரிசிகளின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் உணர்வு பூர்வமான நாடகம், ஒவ்வொருவரையும் அர்ப்பணிக்க வைத்தது.





முகாமில் கலந்து கொண்ட ஊழியர்கள்



Rev. டேவிட் பிரகாசம்

இறுதி நாளில் பேராயர் மற்றும் போதகர்கள் பிரதிஷ்டை ஆராதனை நடைபெற்றது.

**43 சுதேச ஊழியர்கள் போதகர்**களாகவும், குஜராத்தைச் சேர்ந்த போதகர் **வில்சன் சங்காடா**, இராஜஸ்தானைச் சேர்ந்த போதகர் **பாதர் பாரியா** ஆகியோர் **இணைப் பேராயர்**களாக அபிஷேகிக்கப்பட்டு, பிரதிஷ்டை செய்யப்பட்டனர்.



சகோ. மோகன் சி. லாசரஸ்



சகோ. S. சாம் ஜெபராஜ்



ஜெப வேளையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போதகர்களுக்குப் பரிசு



சிறப்பு ஜெபம்



பரிசுகள் வழங்கல்



அபிஷேகிக்கப்பட்ட போதகர்கள்

27 வருடங்களை கடந்து 3 திருமண்டலங்களாக உருவாக்கப்பட்டுள்ள 'ஷாலோம்' மிஷனெரி ஸ்தாபனம், **'Synod of Shalom Churches in India'** என்கிற பெயரில் பதிவு செய்யப்பட்டு, **Moderator Rev. John Sathyakumar *(Angelican Bishop)***, பேராயர் தேவதாஸ் மற்றும் நமது சகோதரர் அவர்கள் தலைமையில் ஜெபித்து, பிரதிஷ்டை செய்யப்பட்டது.

கலந்து கொண்ட அனைவருக்கும் சிறப்புப் பரிசாக வண்ண நிறக் கம்பளி ஒன்று வழங்கப்பட்டது. நமது ஊழியத்தின் செலவில் நடத்தப்பட்ட இந்த முகாமில் கலந்து கொண்ட அனைவருக்கும் 3 வேளையும் சுவையான உணவு வழங்கப்பட்டது.

ஒவ்வொரு ஊழியர்களும் தங்கள் 'பீல்' இன மக்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்ற பாரத்தோடும், தரிசனத்தோடும் புறப்பட்டுச் சென்றனர்.



வழங்கப்பட்ட வண்ண நிறக் கம்பளிகள்



சுவையான உணவு வழங்கல்




'Shalom Synod பிரதிஷ்டை'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயப் பிரதிஷ்டை ஆராதனை!



ஆலயப் பிரதிஷ்டை



ஒலி பெருக்கிக் கருவிகள்



விசுவாசிகளுக்கு வேதாகமங்கள்



திரளான ஆத்துமாக்கள்



'நண்டேலா' ஆலயம் - குஜராத்



'ஜோக்டிமால்' ஆலயம் - இராஜஸ்தான்

மத்தியப் பிரதேசம்-'சொக்குவாடா' என்கிற இடத்தில் ₹ **5,00,000/-** மதிப்பில் பெரிய ஆலயமும், குஜராத் மாநிலம்-'**நண்டேலா**' என்கிற இடத்திலும், இராஜஸ்தான்-'**ஜோக்டிமால்**' என்கிற இடத்திலுமாக, தலா ₹ **2,00,000/-** மதிப்பில் சிறிய ஆலயமும் நமது ஊழியத்தின் சார்பாகக் கட்டிக் கொடுக்கப்பட்டது. இந்த ஆலயங்களை, சகோ. R. **ஜெபசிங்**, பிஷப் V. **தேவதாஸ்** ஆகிய தேவ ஊழியர்கள் ஜெபித்து, பிரதிஷ்டை செய்தார்கள்.

இந்த 3 ஆலயங்களிலும் நடைபெற்ற முதல் ஆராதனைகளை கர்த்தர் ஆசீர்வதித்தார். மேலும், நமது ஊழியத்தின் சார்பாக ஒலி பெருக்கிக் கருவிகளும், தேவ ஊழியர்களுக்கு உடைகளும், புதிய விசுவாசிகளுக்கு பரிசுத்த வேதாகமங்களும் பரிசாக வழங்கப்பட்டது.

இப்படியாக, ஏராளமான மிஷனெரிகளைத் தாங்கவும், ஆலயங்களைக் கட்டியெழுப்பவும் கர்த்தர் உதவி செய்து வருவது மட்டுமல்லாமல், அவர்கள் மூலமாக திரளான ஆத்துமாக்களை அறுவடை செய்து வருகிறார். இதுவரை நமது மிஷனெரி ஊழியத்தின் மூலமாக, சுமார் **30,58,047 ஆத்துமாக்கள்** சந்திக்கப்பட்டு, சுமார் **3,30,736 பேர் இரட்சிக்கப்பட்டு**, சுமார் **27,708 பேர் ஞானஸ்நானம்** பெற்று, திருச்சபைகளில் அங்கமாக கர்த்தர் கிருபை செய்துள்ளார். இதுவரை, **280 ஆலயங்களைக் கட்டிக் கொடுத்து**, 57 மிஷனெரி ஸ்தாபனங்கள் மூலமாக **357 மிஷனெரிகளையும்**, **114 ஆதிவாசிக் குழந்தைகளையும்** பொறுப்பெடுத்து தாங்கி வருகிறோம்.

**கர்த்தருடைய இந்த உன்னதமான பணிக்காக ஜெபித்தும், கொடுத்தும் தாங்கி வருகிற உங்களை கர்த்தர் பன்மடங்காக ஆசீர்வதித்து பெருகச் செய்ய நாங்கள் ஜெபிக்கிறோம்.**

தொடர்ந்து இந்த மிஷனெரி ஊழியங்களுக்காக **ஜெபியுங்கள்**.

- ஒருங்கிணைப்பாளர்.



'சொக்குவாடா' ஆலயம் - மத்தியப் பிரதேசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவும், பகலும் 24 மணி நேரமும் ஜெபிக்க,

# தேவனுடைய கூடாரத்தில்




# ஜெபக் கோபுரம்!

"...உன் மதில்களின்மேல் பகல்முழுதும் இராமுழுதும் ஒருக்காலும் மவுனமாயிராத ஜாமக்காரரைக் கட்டளையிடுகிறேன்." (ஏசாயா 62:6) என்று அனேக ஆண்டுகளுக்கு முன்பாக, '**இயேசு விடுவிக்கிறார்**' ஊழியத்திற்கு கர்த்தர் வாக்குக் கொடுத்தார்.

அதாவது, "இரவும், பகலும் ஜெபிக்கிற ஜாமக்காரரைத் தருவேன்!" என்றார். அதன்படி, நம் இந்தியா தேசத்திற்காக ஜெபிக்க, '**ஜாமக்காரன் ஜெபம்**' ஆரம்பிக்கப்பட்டது.

சுமார் 10 ஆண்டுகளுக்கும் மேலாக, இந்த ஜாமக்காரன் ஜெபம் நடைபெறுகிறது. **தினமும்** சுமார் 30 பேர் கூடி வந்து, **காலை 9:00 மணிமுதல், மாலை 3:00 மணிவரை** தேசத்தின் எழுப்புதலுக்காக **ஜெபிக்கிறார்கள். இரவு 9:00 மணிமுதல், அதிகாலை 3:00 மணிவரை சகோதரர்கள் மட்டும்** கூடி வந்து **ஜெபிக்கிறார்கள்.**

தேவனுடைய கூடாரம் கட்டப்பட்டவுடன், இரவும், பகலும் ஜெபிக்கிற மக்கள் கூடி வருவார்கள்.

**தேவனுடைய கூடாரத்தின் முன் பகுதியில், ஜெபக் கோபுரம் கட்டுகிற வேலையை ஆரம்பித்து இருக்கிறோம்.** இந்த ஜெபக் கோபுரத்தில், 24 மணி நேரமும் தேசத்தின் எழுப்புதலுக்காக ஜெபம் ஏறெடுக்கப்பட்டுக் கொண்டே இருக்கும். இதற்காக **ஜெபியுங்கள்.**

கர்த்தர் ஏவினால், இந்த **ஜெபக் கோபுரக் கட்டுமானப் பணியில் நீங்களும் பங்கு பெறலாம்.** இதற்கென்று நீங்கள் அனுப்புகிற காணிக்கை முழுவதும், ஜெபக் கோபுரக் கட்டுமானப் பணியில் பயன்படுத்தப்படும்.

இந்த ஜெபக் கோபுரக் கட்டுமானப் **பணியில், உங்கள் பங்கும் இருக்க வேண்டும்** என்று கர்த்தர் விரும்புகிறார். நாம் யாவரும் சேர்ந்து, இதைக் கட்டி எழுப்ப வேண்டும்! கர்த்தர் உங்களை **ஏவுகிறபடி உங்கள் பங்குகளை அனுப்பலாம்!**



**இந்த தேவனுடைய கூடாரக் கட்டுமானப் பணிக்காகக் காணிக்கை அனுப்ப நீங்கள் கர்த்தரால் ஏவப்பட்டால், இங்கே கொடுக்கப்பட்டுள்ள வங்கிக் கணக்கில் உங்கள் காணிக்கைகளைச் செலுத்தி, தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.**


**- உங்கள் சகோதரன்.**

## காணிக்கை அனுப்ப...

| | |
|---|---|
| A/c Name: | Jesus Redeems Ministries - Sri Lanka, |
| A/c No: | 7010 1000 7680 |
| Bank Name: | Hatton National Bank PLC. |
| Branch: | Nawam Mawatha - Colombo -02. |

**Contact: 57/36A, Thimbirigasyaya Road, Hendala, P.O. 108, Wattala, SRILANKA. (Ph: 011 293 0152, 071 437 1111)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாலுமாவடி – திறப்பின் வாசல் ஜெப சாட்சிகள்!

# உங்கள் அற்புதத்தின் நாள்!

இயேசு கிறிஸ்து அற்புதமானவர்! அவர் உங்களுக்கு அற்புதம் செய்ய விரும்புகிறார்! உங்களுக்கு ஒரு அற்புதம் தேவை! உங்களுக்கு அற்புதம் செய்ய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஆயத்தமாக இருக்கிறார்!

ஆனால், உங்கள் அற்புதத்திற்காக நீங்கள் வேண்டுதல் செய்ய வேண்டும்! உங்களோடு சேர்ந்து, உங்கள் அற்புதத்திற்காக ஜெபிக்க, திறப்பின் வாசல் ஜெபத்தை கர்த்தர் ஏற்படுத்தினார். கடந்த நாட்களில், திறப்பின் வாசல் ஜெபத்தினால் அற்புதங்களைப் பெற்றுக் கொண்டவர்களின் அனுபவத்தைப் பாருங்கள்:

## அற்புதங்களைச் செய்தார்!



சிறு வயதிலிருந்தே எனக்கு **பார்வைக் குறைபாடு** இருந்தபடியினால், மிகவும் கஷ்டப்பட்டேன். 'லேசர்' ஆபரேஷன் செய்த அடுத்த நாளே, வலது **கண் சிவந்து, தண்ணீர் வடிய** ஆரம்பித்தது. நாளடைவில் அந்தக் **கண் சுருங்கி**, கடைசியில் **மூடி விட்டது!** அந்த சமயத்தில், எனக்கு கடைசிப் பரீட்சை நடந்து கொண்டிருந்தது.

மிகுந்த மன வேதனையோடு இருந்த சமயத்தில், திறப்பின் வாசல் ஜெபத்தைக் குறித்து, என் சித்தி மூலமாகக் கேள்விப்பட்டு, முதன்முதலாக அந்த ஜெபத்தில் கலந்து கொண்டேன். ஜெப வேளையில், சகோதரர் அவர்கள் கேட்டுக் கொண்டபடியே, என் கண்களில் கை வைத்து ஜெபித்தேன். கர்த்தர் எல்லா **பிரச்சனைகளையும் மாற்றி, தெளிவான பார்வையைத் தந்து**, பரீட்சையையும் **நன்றாக எழுதி முடிக்கக்** கிருபை செய்தார். **– மோனிஷா, தக்கலை.**

## கை விடாத கர்த்தர்!

நான் 3 மாதக் குழந்தையாக இருந்தபோது, என் **நுரையீரல் முழுவதுமாக** ஏராளமான **கட்டிகள்** உண்டாகி, புற்று நோயைப் போன்ற ஒரு வியாதியினால்



பாதிக்கப்பட்டேன். டாக்டர்கள் என்னைக் **கைவிட்டு விட்டார்கள்.** மிகுந்த மன வேதனையோடு என் பெற்றோர் என்னைத் தூக்கிக் கொண்டு வந்து, திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டு, கடைசி ஜெப வேளையில் சகோதரர் அவர்களைச் சந்தித்து, ஜெபித்தார்கள். கர்த்தர் அற்புதமான **சுகத்தை** எனக்குக் **கொடுத்து**, என் **மரணப் படுக்கையை மாற்றினார்.** இன்றைக்கு எனக்கு 18 வயதாகிறது. இந்நாள் வரை பூரண **சுகத்தோடு** இருக்கிறேன். **– பிரபா, காட்டுமன்னார்கோயில்.**

## மரணப் படுக்கையை மாற்றினார்!

திடீரென்று நான் **குளிர் காய்ச்சலினால்** பாதிக்கப்பட்டு, என்னால் எதுவுமே செய்ய



முடியவில்லை. பரிசோதித்துப் பார்த்தபோது, இருதயத்திற்கு அருகில் இருக்கிற ஒரு நரம்பில் **90% அடைப்பு இருக்கிறபடியினால்**, இரத்த ஓட்டம் சரியாக இல்லை. கண்டிப்பாக உடனே ஆபரேஷன் பண்ண வேண்டும்." என்று டாக்டர்கள் சொன்னார்கள்.

இக்கட்டான சூழ்நிலையில், **'இயேசு விடுவிக்கிறார்'** ஊழியத்திற்குத் தொடர்பு கொண்டு, எனக்காக ஜெபிக்கக் கேட்டுக் கொண்டேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு, அந்த **அடைப்பை நீக்கி**, டாக்டர்களே ஆச்சரியப்படும்படியாக அற்புதமான சுகத்தை எனக்குக் கொடுத்து, என் **மரணப் படுக்கையை மாற்றினார். – ஆனந்த் ஜெபசிங்.**

## ஆபரேஷனின்றி அற்புத சுகம்!

எதிர்பாராத விதமாக நான் கீழே விழுந்ததினால், இடது **கையில் பலமாக அடிபட்டு**, எந்த ஒரு **வேலையும் செய்ய முடியாமல்** ஆகி விட்டது. டாக்டர்கள், "ஆபரேஷன்தான் செய்ய வேண்டும். ₹ 20 லட்சத்திலிருந்து, ₹ 30 லட்சம்வரை ஆகும்." என்று சொன்னார்கள்.



ஆனால் நான் ஆபரேஷனுக்குச் சம்மதிக்காமல், தொடர்ந்து திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டு ஜெபித்து வந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு, **ஆபரேஷன் செய்ய வேண்டிய அவசியமே இல்லாமல்**, அற்புதமான **சுகத்தைக் கொடுத்தார்.** இப்போது என்னால் எல்லா **வேலைகளையும் நன்றாகச் செய்ய முடிகிறது.**
**– பாப்பா (எ) பாக்கியம், கொம்பாடி தலைவாய்புரம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முழு விடுதலை கொடுத்தார்!

**2 வருடங்களாக** எப்பொழுதும் எனக்குள் ஒரு விதமான **பயமும், மனக்** குழப்பமாகவும் இருந்தது. ஒரு விடுதலையோடு என்னால் **எதுவுமே செய்ய முடியவில்லை.**



வேதாகமத்தை வாசித்தாலும், **அவிசுவாசம்தான்** எனக்குள் **தலை தூக்கி நிற்கும்.** ஆகவே, வேதாகமம் வாசிப்பதையும், ஜெபிப்பதையும் நிறுத்தி விட்டேன்.

ஆனாலும், இயேசு கிறிஸ்துவை விட்டு விட எனக்கு மனமில்லை. மிகுந்த மனப் போராட்டத்தோடு, என் விடுதலைக்காக திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டு ஜெபித்தேன். கர்த்தர் எனக்கு **முழு விடுதலையைக்** கொடுத்தார். இப்பொழுது நான் நன்றாக இருக்கிறேன். - **முத்துலெட்சுமி,** மகாராஜநகர்.

## ஆபரேஷனின்றி அற்புத சுகம்!

என் மனைவிக்கு **மூக்கிற்குள் ஒரு சதை வளர்ந்து, சுவாசிக்க முடியாமல் 7 வருடங்களாக வேதனைப்பட்டாள்.** டாக்டர்கள், "ஆபரேஷன் செய்ய வேண்டும். சுமார் ₹ 35,000/- வரை செலவாகும்." என்று சொன்னார்கள். எங்களிடத்தில் அதற்குரிய **பண வசதி இல்லை.**



மிகுந்த மன வேதனையோடு தொடர்ந்து திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டு, ஒரு பொருத்தனையோடு ஜெபித்து வந்தோம். கர்த்தர் அற்புதமாக அந்த **சதையை மறையப் பண்ணினார்.** இப்போது அவளால் **நன்றாக சுவாசிக்க முடிகிறது.** - **வில்சன்,** திருவட்டார்.

## ₹ 8 லட்சம் கடன் அடைபட்டது!

நான் செய்து கொண்டிருந்த **தொழில் நஷ்டப்பட்டு,** சுமார் ₹ **8 லட்சம் வரை கடனாகி** விட்டது.



கொஞ்ச நாட்கள் வெளியே வேலை பார்த்துக் கொண்டு, வட்டி கட்டிக் கொண்டே இருந்தேன். அதன் பிறகு, என்னால் **வட்டி கட்ட முடியவில்லை.** மிகுந்த மன வேதனையோடு, திறப்பின் வாசல் ஜெபத்தில் ஜெபிக்கும்படியாகக் கேட்டுக் கொண்டேன்.

கர்த்தர் எனக்கொரு வழியைத் திறந்து கொடுத்து, **3 மாதத்திற்குள்** ₹ **8 லட்சம் கடனை அடைத்து முடிக்கக்** கிருபை செய்தார். நல்ல ஒரு **வேலையையும்** எனக்குக் **கொடுத்து** இருக்கிறார். - **அருமை ரூபன்,** காரைக்குடி.

## கட்டி மறைந்து, குழந்தை பாக்கியம்!

எனக்குத் திருமணமாகி ஒன்றரை வருடம் கழித்து கர்ப்பம் தரித்தேன். 50வது நாளில் **வயிற்று வலி** இருந்தபடியினால், பரிசோதித்துப் பார்த்தபோது, **கர்ப்பப் பையில் ஒரு கட்டி** இருப்பது தெரிய வந்தது.



டாக்டர்கள், "குழந்தையை கருச் சிதைவு (Abortion) செய்து விட்டு, கட்டியை ஆபரேஷன் செய்து எடுக்க வேண்டும்." என்று சொன்னார்கள். நான் அதற்குச் சம்மதிக்காமல், திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டேன்.

ஜெப வேளையில், சகோதரர் அவர்கள் கட்டிகள் மறையும்படியாக ஜெபத்தை ஏறெடுத்தபோது, நானும் இணைந்து ஜெபித்தேன்.

அப்பொழுது என் வயிற்றுக்குள் இருந்து, ஏதோ ஒன்று என்னை விட்டு **வெளியேறிப் போனதைப் போல** இருந்தது. அந்நேரமே **கட்டி மறைந்து, வலியும் நீங்கிப் போனது.** மறுபடியும் பரிசோதித்துப் பார்த்தபோது, **"எந்தப் பிரச்சனையும் இல்லை."** என்று டாக்டர் சொல்லும்படியாக கர்த்தர் கிருபை செய்தார்.

ஏற்ற வேளையில் சுகப் பிரசவத்தில் அழகான ஒரு பெண் **குழந்தையைப்** பெற்றெடுக்கவும் கர்த்தர் **உதவி செய்தார்.** - **ஜெனிபர், தச்சநல்லூர்.**

பாருங்கள், இவர்களுக்கு அற்புதம் செய்த கர்த்தராகிய **இயேசு கிறிஸ்து, உங்களுக்கும் அற்புதம் செய்வார்!** உங்கள் காரியம் எதுவாக இருந்தாலும், அந்தக் காரியத்தை கடிதத்தில் எழுதி, பின்கோடுடன் கூடிய உங்கள் தெளிவான முகவரியோடு எங்களுக்கு அனுப்பி வையுங்கள். **நாங்கள் உங்களுக்காக ஜெபிப்போம்.** நீங்களும் இந்த நாளில் உபவாசித்து, **விசுவாசத்தோடு ஜெபியுங்கள்.** இயேசு கிறிஸ்து உங்களுக்கும் அற்புதம் செய்து, உங்கள் துக்கத்தை மாற்றுவார். திறப்பின் வாசல் **ஜெப தினத்தன்று,** காலை 9:00 - மாலை 3:00 மணிவரை ஜெபிப்போம். **நீங்களும் இதே நேரத்தில் எங்கிருந்தாலும் ஜெபியுங்கள்.** ஜெபத்தில் கர்த்தர் உங்களுக்குக் கொடுக்கும் பதிலை உங்களுக்குத் தெரியப்படுத்துவோம். - உங்கள் சகோதரன்.

நாலுமாவடி திறப்பின் வாசல் ஜெபம்!

**உங்கள் அற்புதத்தின் நாள்: 2018**

# டிசம்பர் 29

(கடைசி சனிக்கிழமை)

Address: Standing in the Gap Prayer,
Nalumavadi-628 211,
Thoothukudi Dist., India.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுப்புதலுக்கு வித்திட்ட தேவ மனிதர்,

## சகோ. J. சாம் ஜெபத்துரை.



(30.01.1948 - 31.10.2018)

அண்ணன் J. **சாம் ஜெபத்துரை** அவர்களை, 33 வருடங்களாக எனக்குத் தெரியும்! 30 வருடங்களாக திருப்பத்தூர்- உபவாச முகாமில் அண்ணன் அவர்களோடு இணைந்து நின்று, இந்திய தேசத்தின் எழுப்புதலுக்காக ஜெபித்து வருகிறோம். அண்ணன் அவர்களை கர்த்தர் எடுத்துக் கொண்டது, என் உள்ளத்தைப் பாதித்தது. அவர்களுடைய மறைவு, தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு ஏற்பட்ட ஓர் இழப்பு!

அருமை அண்ணன் அவர்கள், தேவனுடைய இராஜ்ஜியம் விருத்தி அடைவதற்காக, எழுப்புதல் தரிசனத்தோடு ஊழியம் செய்தவர்கள். 30 ஆண்டுகளுக்கு முன்பாக, தென் கொரியா தேசத்தின் எழுப்புதலைப் பார்க்க, என்னை அந்த தேசத்திற்கு அழைத்துப் போனவர்கள், அண்ணன் அவர்கள்தான்.

அங்கு நானும், 'துதி' சங்கர் அண்ணன் அவர்களும் ஒரே அறையில் தங்கி இருந்தோம். தென் கொரியா தேசத்தின் எழுப்புதலைப் பார்த்து, "அண்ணன், நம்முடைய இந்திய தேசத்திலும் இப்படிப்பட்ட ஒரு எழுப்புதல் வர வேண்டுமே!" என்று நான் கேட்டபோது, "எஸ்தர்', 'மொர்தெகாய்' போன்றவர்களைப் போல, 3 நாட்கள் உபவாசித்து ஜெபித்தால், எழுப்புதல் வரும்!" என்று சொல்லி, திருப்பத்தூர்-உபவாச முகாமிற்கு வித்திட்டவர்கள் அண்ணன் அவர்கள்தான்.

### எழுப்புதல் தரிசனம் உள்ளவர்கள்!

அண்ணன் அவர்கள், நம் இந்திய தேசத்தின் எழுப்புதலைக் குறித்த ஒரு தரிசனம் உள்ளவர்கள். இதற்காக, எழுப்புதல் நடைபெற்ற சில தேசங்களுக்குப் பிரயாணப்பட்டு, அங்குள்ள எழுப்புதலை நேரடியாகப் பார்த்து, "நம்முடைய தேசத்திலும் இப்படிப்பட்ட எழுப்புதல் வர வேண்டும்!" என்கிற ஒரு தாகம் கொண்டவர்கள். எழுப்புதலைக் குறித்து அண்ணன் அவர்களிடத்தில் நான் கேட்டபோது, ஒவ்வொரு தேசங்களில் உண்டான வித விதமான எழுப்புதலைக் குறித்து சொல்லிக் கொடுத்தார்கள்.

'பரிசுத்த எழுப்புதல்!', 'ஜெப எழுப்புதல்!', 'வேத வசன எழுப்புதல்!' என்று, வித விதமான எழுப்புதலைக் குறித்து விவரித்துச் சொன்னார்கள். அண்ணன் அவர்களுடைய புத்தக ஊழியத்தின் ஆரம்ப நாட்களில் அவர்கள் எழுதிய, **'எழுப்புதல் எப்போது?'** என்கிற புத்தகம், எனக்குள் எழுப்புதலைக் கொண்டு வந்தது! **'தீப்பொறி அனுபவங்கள்!'** என்கிற, அண்ணன் அவர்கள் எழுதிய புத்தகம், தென் கொரியா தேசத்தின் எழுப்புதலை நம் கண் முன் கொண்டு வந்து நிறுத்தியது! அண்ணன் அவர்கள் எழுதிய, **'கல்வாரிப் பாதையில் நீ!'** என்கிற புத்தகம், அனேகருடைய உள்ளத்தில் எழுப்புதல் அக்கினியைப் பற்ற வைத்தது! அண்ணன் அவர்களுடைய பிரசங்கச் செய்திகளிலும், எழுத்து ஊழியங்களிலும் எழுப்புதலைக் காண முடியும்!

### எழுப்புதலுக்காகப் பிரயாசப்பட்டவர்கள்!

அண்ணன் அவர்கள், ஒரு எழுப்புதல் தரிசனத்தோடு தேசத்தின் எழுப்புதலுக்காக ஜெபித்தது மாத்திரமல்ல, நம்முடைய இந்திய தேசத்தின் எழுப்புதலுக்காக மிகவும் அதிகமாக பிரயாசப்பட்டார்கள். அதற்காக திருப்பத்தூரில் ஒரு எழுப்புதல் ஜெப மையத்தையே உருவாக்கினார்கள்.

தேவ பிள்ளைகளுக்குள்ளே வேத வசனத்தின் எழுப்புதலைக் கொண்டு வருவதற்காக, அண்ணன் அவர்களை கர்த்தர் அதிக வல்லமையோடு பயன்படுத்தினார். **'அன்றன்றுள்ள அப்பம்!'** என்கிற தின தியானப் புத்தகத்தில் தினந்தோறும் அண்ணன் அவர்கள் எழுதுகிற வேத வசன தியானம் அனேகருக்குள் எழுப்புதல் தீயை மூட்டியது.

அண்ணன் அவர்கள், கர்த்தருடைய வசனத்தை ஜனங்களுக்குள் கொண்டு செல்ல அதிக பிரயாசப்பட்டார்கள். எப்பொழுதும் எழுதிக் கொண்டே இருப்பார்கள். மட்டுமல்ல, ஆவியானவர் மூலமாக வருகிற எழுப்புதலைப் பற்றி பல தேசங்களிலும் பிரசங்கித்து, ஏராளமான தேவ பிள்ளைகளை ஆவியானவரின் எழுப்புதலுக்குள் வழி நடத்தினார்கள்.

அண்ணன் அவர்கள் ஆரம்பித்த திருச்சபைக்கும், **'ஏலீம் மகிமையின் எழுப்புதல் திருச்சபை!'** என்று பெயர் வைத்து, திருச்சபையின் எழுப்புதலுக்காகப் பிரயாசப்பட்டு, பல திருச்சபைகளை உருவாக்கி இருக்கிறார்கள்.

### எழுப்புதலுக்காக விலைக் கிரயம் கொடுத்தார்கள்!

அண்ணன் அவர்கள், 30 ஆண்டுகளுக்கு முன்பாகவே, நம் தேசத்தின் எழுப்புதலுக்காக தன் இரத்தத்தை விலைக் கிரயமாகக் கொடுத்து இருக்கிறார்கள்! ஒருமுறை, அண்ணன் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஒரு திருச்சபையில் தேவ வார்த்தையைப் பிரசங்கித்து, ஜனங்களை எழுப்புதலுக்குள் வழி நடத்தி, கூட்டத்தை முடித்து விட்டுப் புறப்பட்டபோது, சில மதத் தீவிரவாத அமைப்பினரால் மிகக் கொடுமையாகத் தாக்கப்பட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணன் அவர்களை அழைத்து அந்தக் கூட்டத்தை நடத்திய, C.S.I. திருச்சபைப் போதகரும், துணையாக வந்த ஒரு திருச்சபைத் தலைவரும் தாக்கப்பட்டு, இரத்த வெள்ளத்தில் விழுந்தார்கள்! அந்த மதத் தீவிரவாதிகள், "இவர்கள் மரித்துப் போய் விட்டார்கள்!" என்று எண்ணி, திரும்பிப் போய் விட்டார்கள்.

அண்ணன் அவர்கள், தலையில் கொடூரமாகத் தாக்கப்பட்டு, மயங்கி விழுந்தார்கள். அந்த அனுபவத்தைப் பற்றி அண்ணன் அவர்கள் சொல்லும்போது, "நான் மரிக்கப் போகிறேன்!' என்பதை உணர்ந்து, 'மரண நேரம் எப்படி இருக்கும்?' என்பதை அனுபவித்தேன்!" என்று சொன்னார்கள். அண்ணன் அவர்கள், சுவிசேஷத்திற்காக தன் இரத்தத்தைச் சிந்தி, மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தவர்கள்!

ஆனால், கர்த்தருடைய மாபெரும் கிருபையினால் உயிர் பிழைத்தார்கள்! அண்ணன் அவர்கள், இயேசு கிறிஸ்துவுக்கென்று ஒரு உயிருள்ள இரத்த சாட்சியாக வாழ்ந்து, தன்னுடைய ஓட்டத்தை ஜெயத்தோடு முடித்தார்கள்.

## அற்புத மனிதர்!

அண்ணன் அவர்களை, 'அற்புத மனிதர்!' (Miracle Man) என்று நான் சொல்வதுண்டு. அண்ணன் அவர்களுக்கு 2 முறை 'Stroke' வந்தும், அது வந்ததற்கான அறிகுறியே இல்லாமல் சுகம் பெற்று, தொடர்ந்து கர்த்தருக்காக மிகக் கடினமாக உழைத்தார்கள். காரணம், அவர்களுடைய விசுவாசம்! இயேசு கிறிஸ்துவின் மீது அண்ணன் அவர்கள் கொண்ட அன்பு!

அண்ணன் அவர்கள், 15 ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு மரணப் போராட்டத்தில் இருந்து மீண்டு வந்தவர்கள். "நான் கர்த்தரிடத்தில் 15 வருடங்கள் கூட்டிக் கேட்டிருக்கிறேன். அதுவரை அவருடைய ஊழியத்தை தீவிரமாய் செய்ய வேண்டும்." என்று சொல்லி, இந்த 15 வருடங்களும் ஓய்வில்லாமல் கர்த்தருக்காக உழைத்தார்கள். அவர்கள் கர்த்தரிடத்தில் கேட்டுக் கொண்டபடியே, 15வது வருடத்தில் இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்து விட்டார்கள்!

அண்ணன் அவர்கள் கடைசிவரை, தான் விரும்பியபடியே, கர்த்தருடைய வார்த்தைகளைப் பிரசங்கித்துக் கொண்டே இருந்தார்கள். இலங்கை தேசத்தில் ஊழியத்தை முடித்து விட்டு வந்த மறுநாள், தன் ஓட்டத்தை முடித்து, வெற்றி சிறந்தார்கள்!

"இப்படிப்பட்ட ஒரு தேவ மனிதரோடு இணைந்து, 30 வருடங்கள் ஊழியம் செய்ய கர்த்தர் எனக்குக் கிருபை செய்தாரே!" என்று எண்ணி, நான் கர்த்தரைத் துதித்தாலும், "எங்கள் அண்ணனை இழந்து விட்டோமே!" என்கிற துக்கம் இன்னும் எனக்கு நீங்கவில்லை.



வருடத்திற்கு 2 முறை திருப்பத்தூர்-உபவாச முகாமில் அண்ணன் அவர்களோடு இணைந்து நின்று ஊழியம் செய்த அந்த நாட்களை என்னால் மறக்க முடியாது. ஒவ்வொரு திருப்பத்தூர்-உபவாச முகாமிலும் அவர்கள் கொடுக்கிற தேவ செய்திகளும், ஜெபங்களும் எனக்குள் ஒரு புதிய அர்ப்பணிப்பையும், அபிஷேகத்தையும் கொண்டு வரும். அதற்காகவே நான் மிகுந்த ஆசையோடு திருப்பத்தூருக்குச் செல்வேன். ஜெபத்தை முடித்து விட்டு, தேவ ஊழியர்களாக நாங்கள் அமர்ந்து மகிழ்ந்திருந்த அந்த நாட்கள், மறக்க முடியாத அனுபவங்கள். அண்ணன் அவர்கள், எங்களுக்கெல்லாம் ஒரு மூத்த சகோதரனாக இருந்து, எங்களை வழி நடத்தியவர்கள்.


அவர்களுடைய அன்பையும், அவர்களோடு கொண்ட ஐக்கியத்தையும் நினைக்கும்போது, "இன்னும் ஒரு 10 வருடங்களாவது கர்த்தர் அவர்களுடைய ஆயுசு நாட்களைக் கூட்டிக் கொடுத்திருந்திருக்கலாமே!" என்று இருதயம் கதறுகிறது.

என்றாலும், **"அவனுடைய ஊழியத்தின் நாட்கள் நிறைவேறினவுடனே தன் வீட்டுக்குப் போனான்."** (லூக்கா 1:23) என்ற தேவ வசனத்தின்படியே, கர்த்தர் தனக்குக் கொடுத்த ஊழியத்தை ஜெயத்தோடு முடித்து, அண்ணன் அவர்கள் விரும்பிய பரலோக வீட்டிற்குப் போய் விட்டார்கள்.

## இனி என்ன செய்ய வேண்டும்?

அண்ணன் அவர்களை அறிந்திருக்கிற, அவர்களுடைய ஊழியத்தினால் ஆசீர்வதிக்கப்பட்ட நாம், **இனி என்ன செய்ய வேண்டும்?** இந்த ஊழியம் தொடர்ந்து நடைபெற நாம் **ஜெபிக்க வேண்டும்**. இந்த ஊழியத்திற்கு நாம் **உதவியாக இருக்க வேண்டும்!**

மகன் '**ஆஸ்பார்ன்**'ஐ, தொடர்ந்து இந்த ஊழியங்களைச் செய்ய கர்த்தர் அபிஷேகித்து இருக்கிறார். கடைசி மகன் '**யோசுவா**'வும், ஊழியத்திற்கென்று தன்னை அர்ப்பணித்து இருக்கிறான். மகள் '**சபீனா**'வை, '**அன்றன்றுள்ள அப்பம்!**' தின தியானத்தை எழுத, ஏற்கெனவே கர்த்தர் ஆயத்தப்படுத்தி விட்டார்! மகள் '**டுவிங்கள்**' ஊழியத்திற்கு துணையாக இருக்கிறாள். **இந்த ஊழியக் குடும்பத்திற்காக ஜெபியுங்கள்!** அண்ணன் அவர்களைக் கொண்டு கர்த்தர் செய்ததை விட, பல மடங்கு ஊழியத்தை அவருடைய பிள்ளைகளைக் கொண்டு கர்த்தர் செய்வார்! தொடர்ந்து **உதவிகளை அனுப்பி, ஊழியத்தைத் தாங்குங்கள்.**



ஊழியங்களை தொடர்ந்து நடத்திச் செல்லும் தம்பி ஆஸ்பார்ன்

கர்த்தருடைய வருகை வரை '**அன்றன்றுள்ள அப்பம்!**' ஊழியம் மகிமையாக நடைபெறும்! – **உங்கள் சகோதரன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இங்கிலாந்தில் ஊற்றப்பட்ட ஜெப அக்கினி!

இந்தக் கடைசி நாட்களில், தேசங்களின் எழுப்புதலுக்காக, நமது **'இயேசு விடுவிக்கிறார்'** ஊழியங்களை கர்த்தர் பயன்படுத்தி வருகிறார்.

அவருடைய சித்தத்தின்படியே, இங்கிலாந்திலுள்ள Faith Church ஊழியங்களின் சார்பாக, பேராயர் G. A. Antony அவர்களுடைய அழைப்பின் பேரில், நமது சகோதரர் **மோகன் சி. லாசரஸ்** அவர்கள் அங்கு சென்று, கடந்த (2018) அக். 25,26,27,28 தேதிகளில், Surbiton மற்றும் Croydon ஆகிய பகுதிகளில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த 4 நாட்கள் ஊழியங்களை நிறைவேற்றி வர, கர்த்தர் கிருபை செய்தார். இந்தக் கூட்டங்களின் மூலமாக, கர்த்தர் தமது எழுப்புதல் அக்கினியை ஊற்றினார்.

Faith Church ஊழியங்களின் **25வது வருடாந்திர நிறைவைக்** கொண்டாடும் விதமாக, அக். 25, 26, 28 தேதிகளில், அங்குள்ள South Borough High Schoolல் வைத்து, **'அக்கினி ஜெப முகாம்!'** நடத்தப்பட்டது. இம்முகாமில் சுமார் **1,500**க்கும் அதிகமான தேவ பிள்ளைகள் கலந்து கொண்டு, கண்ணீரோடும், மிகுந்த பாரத்தோடும் ஜெபித்தார்கள்.



அக்கினி ஜெப முகாம்



பேராயர் **ஜெபமணி**



Rev. லார்வின்

27ம் தேதியன்று, Faith Church ஊழியங்களின் **25வது வருட ஆசரிப்பை** கொண்டாடும் விதமாக, Croydonல் உள்ள Trinity Baptist Church Oasis Houseல் வைத்து, ஒரு **சிறப்புக் கூட்டம்** நடத்தப்பட்டது.

இந்த 4 நாட்களிலும், நமது சகோதரர் **மோகன் சி. லாசரஸ்**, பேராயர் **ஜெபமணி**, **Rev. லார்வின்** ஆகியோர் தேவ செய்திகளைப் பகிர்ந்து கொண்டு ஜெபித்தார்கள். பரிசுத்த ஆவியானவர், நமது சகோதரர் அவர்கள் மூலமாக, தீர்க்கதரிசன வார்த்தைகளாய் வெளிப்பட்டார்.

இந்த ஊழியங்களை, பேராயர் G. A. Antony அவர்கள் மிகச் சிறப்பாக ஒழுங்கு செய்து நடத்தினார்கள். இங்கிலாந்து தேசத்தின் எழுப்புதலுக்காக **ஜெபியுங்கள்**. - ஒருங்கிணைப்பாளர்.



பேராயர் G. A. Antony

25வது வருட நிறைவு சிறப்புக் கூட்டம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிக்கை அனுப்புவோர்
## கவனத்திற்கு...



'இயேசு விடுவிக்கிறார்' ஊழியத்திற்காக, பத்திரிக்கை மற்றும் தொலைக்காட்சி ஊழியத்திற்காகக் கொடுத்து தாங்க விரும்புகிறவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் உங்கள் காணிக்கைகளைச் செலுத்தி, தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**முக்கிய குறிப்பு!**

நீங்கள் காணிக்கை அனுப்பிய பின்னர் நீங்கள் செலுத்தியதற்கான வங்கி சீட்டினையும், எந்த ஊழியத்திற்காக அனுப்பினீர்கள் என்ற விபரத்தையும், உங்களது முழு முகவரியுடன் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். அல்லது தொலைபேசியின் மூலமாக தெரியப்படுத்தலாம். உங்களுக்காக ஜெபித்து, பதில் எழுத அது ஏதுவாயிருக்கும்.

**A/C Name: Jesus Redeems Ministries - Sri Lanka, A/C No. 7010 1000 7680**
**Bank: Hatton National Bank PLC. Branch: Nawam Mawatha - Colombo -02. Swift Code : HBLILKLXXXX.**

# கிளிநொச்சி

முகவரி: இல. 31, உதயநகர் கிழக்கு,
நாகதம்பிரான் கோவில் வீதி,
கிளிநொச்சி.
Ph: 021 - 2285 284.

இயேசு விடுவிக்கிறார்

கெத்செமனே ஜெப மையம்
GETHSEMANE PRAYER CENTRE

அலுவலக நேரம் தினமும் காலை 9:00 - மாலை 7:00 மணிவரை.

## இங்கு நடைபெறும் ஊழியங்கள்!

**பெண்கள் ஜெபம்!** (புதன்கிழமைதோறும்) **12:00 P.M. - 3:00 P.M.**

**உபவாச ஜெபம்!** (சனிக்கிழமைதோறும்) **9:00 A.M. - 12:00 Noon**

**சினெர்ஜியா** வாலிபர் கூட்டம்! (ஞாயிற்றுக்கிழமைதோறும்) **3:00 P.M. - 4:00 P.M.**

**அற்புத விடுதலை பிரார்த்தனை!** (ஒவ்வொரு மாதமும் 2வது சனிக்கிழமை) **5:00 P.M. - 7:00 P.M.**

**முழு இரவு ஜெபம்** (போயா நாளின் முந்தைய தினம்) **இரவு 10:00 P.M. - காலை 5:00 A.M.**

## இலங்கை தேசத்தின் ஆசீர்வாதத்திற்காக ஜெபிக்க வாருங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கர்நாடகா மாநிலத்தில் எழுப்புதலின் ஆவியானவர்!

கர்நாடகா மாநிலத்தின் ஆசீர்வாதத்திற்காகவும், எழுப்புதலுக்காகவும் ஜெபிக்கும்படியாக, கடந்த (2018) நவ.1ம் தேதியன்று **பெங்களூர்-Palace Ground**ல் வைத்து, **12 மணி நேர-திறப்பின் வாசல் உபவாச ஜெபம்** நடைபெற்றது.

இந்த ஜெபத்திற்கு முன்னோட்டமாக, எல்லா மாவட்டங்களிலும், உபவாச ஜெபங்கள் நடத்தப்பட்டது. அதில், திரள் கூட்ட ஜனங்களும், பல திருச்சபைப் போதகர்களும் கலந்து கொண்டு, திறப்பில் நின்று ஜெபித்தார்கள்.

நவ. 1ம் தேதி, கர்நாடக மாநிலம் உருவான நாள்! வருடந்தோறும் அந்த நாளில் பெங்களூரு பட்டணத்தில் உபவாச ஜெபம் நடைபெற்று வருகிறது. இந்த ஜெபத்தின் விளைவாக, அந்த மாநிலத்தில் கர்த்தர் பலத்த காரியங்களைச் செய்து வருகிறார்.

நமது சகோதரர் **மோகன் சி. லாசரஸ்** அவர்கள் தேசத்தின் எழுப்புதலுக்காகவும், சகோ. S. **சாம் ஜெபராஜ்** அவர்கள் கர்நாடகா மாநிலத்தின் ஆசீர்வாதங்களுக்காகவும் ஜெபங்களை ஏறெடுத்தபோது, ஜனங்கள் அனைவரும் இணைந்து, முழு இருதயத்தோடும், முழு பெலத்தோடும் ஜெபங்களை ஏறெடுத்தார்கள்.

நமது சகோதரர் அவர்களும், சகோ. A. **அப்பாத்துரை** அவர்களும் தேவ செய்திகளைப் பகிர்ந்து கொண்டு, ஜெபங்களை ஏறெடுத்தார்கள். தேவ செய்திகளை, சகோ. **அன்பு**, Pr. **கங்காதர்** ஆகியோர் கன்னட மொழியில் மொழியாக்கம் செய்தார்கள். இந்த உபவாச ஜெபத்தில் அனேக தேவ ஊழியர்கள் கலந்து கொண்டு உற்சாகப்படுத்தினார்கள்.



Pr. பால் தங்கையா அவர்கள் (தலைமைப் போதகர், FGAG-பெங்களூரு) கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றி, நமது சகோதரர் அவர்களுக்காக சிறப்பு ஜெபம் ஏறெடுத்தார்கள்.

கடைசி ஜெப வேளையில், ஜெபிக்க வந்திருந்த தேவ பிள்ளைகளுக்காக நமது சகோதரர் அவர்கள் ஜெபித்தபோது, அனேகர் ஆவியானவரால் நிரப்பப்பட்டார்கள்! அப்பொழுது அனேக அசுத்த ஆவிகள் அலறிக் கொண்டு வெளியேறின! அனேகர் தங்கள் ஆவி, ஆத்துமா, சரீரத்தில் விடுதலை பெற்று, சாட்சி சொல்லி, கர்த்தரை மகிமைப்படுத்தினார்கள்.

இந்த ஜெபத்திற்கான சகல ஒழுங்குகளையும், சகோ. P. **செல்வின்** அவர்கள் தலைமையில், அனேக தேவ பிள்ளைகள் மிகுந்த ஜெபத்தோடு ஒழுங்கு செய்திருந்தார்கள். தொடர்ந்து இந்த மாநிலத்தின் எழுப்புதலுக்காக **ஜெபியுங்கள்.** - ஒருங்கிணைப்பாளர்.

## பாடல்-ஆராதனை வேளை



சகோ. ஜாண் பன்னீர் செல்வம்



Pr. இம்மானுவேல்

## மொழியாக்கம் செய்தவர்கள்



சகோ. அன்பு



Pr. கங்காதர்



சகோ. S. சாம் ஜெபராஜ்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்புதங்களைப் பெற்றுக் கொண்டவர்களில் சிலரது சாட்சிகள்...

## அசுத்த ஆவி வெளியேறியது!



ஒரு வருடமாக **அசுத்த ஆவியின்** போராட்டத்தினால் பாதிக்கப்பட்டேன். ஜெப வேளையில், ஆவியானவர் என்னை முழுவதுமாக ஆட்கொண்டு, எனக்குள் இருந்த **அசுத்த ஆவியை துரத்தி, முழு விடுதலையைக்** கொடுத்தார். - **பவித்ரா.**

## தற்கொலை எண்ணம் மாறியது!



சுமார் 2½ வருடங்களாக, எனக்குள் ஒரு **தற்கொலை எண்ணம்** வந்து கொண்டே இருந்தது. அதே எண்ணத்தோடுதான் கூட்டத்திலும் கலந்து கொண்டேன். ஜெப வேளையில், ஆவியானவர் என்னை பலமாக ஆட்கொண்டபோது, அந்தத் **தற்கொலை எண்ணம்** முற்றிலுமாக மாறியது. - **ஆஷா.**

## சிறுநீரகத்தில் அற்புதம்!



என் இரண்டு **சிறுநீரகங்களிலும்** இருந்த **பிரச்சனையினால், வயிறு வீங்கி, 3 வருடங்களாக** மிகவும் கஷ்டப்பட்டேன். ஜெப வேளையில், கர்த்தருடைய வல்லமை என்னைத் தொட்டதை உணர்ந்தேன். அந்நேரமே அற்புதமான **சுகத்தைப் பெற்றுக் கொண்டேன். - சந்தோஷ்.**



மேடையில் தேவ ஊழியர்களோடு நமது சகோதரர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பு– திறப்பின் வாசல் ஜெபத்தில்

# செவி கொடுக்கும் தேவன்!



நமது இலங்கை தேசம் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படவும், சமாதானமும், சுபிட்சமும் தேசத்தில் தழைத்தோங்கவும், திருச்சபைகள் எழுப்புதலடையவும், கர்த்தர் கொடுத்த பாரத்தின்படி, ஒவ்வொரு மாதமும் திரளான தேவ பிள்ளைகளாகக் கூடி தேசத்திற்காக திறப்பிலே நின்று ஜெபித்து வருகிறோம்.

கடந்த (2018) நவம்பர் 3ம் தேதி, கொழும்பு–கிறிஸ்து நாதர் ஆலய சபா மண்டபத்தில் வைத்து நடைபெற்ற திறப்பின் வாசல் ஜெபத்தில் சுமார் 215 தேவ பிள்ளைகளும், 6 திருச்சபைப் போதகர்களும் கலந்து கொண்டனர். பாடல் மற்றும் ஆராதனை வேளையை சகோதரி **தெபொராள்** குழுவினர் நடத்த, சகோ. **ரூபன்** அவர்கள், தேசத்திற்காகவும், திருச்சபைகளுக்காகவும் பிரார்த்தனையை ஏறெடுக்க, கூடி வந்திருந்த ஜனங்கள் அனைவரும் மிகுந்த கண்ணீரோடும், பாரத்தோடும் ஜெபித்தனர். இறுதியில், சகோ. **ஜாண் பாலக்குமார்** ('நம்பிக்கையின் வாசல்' ஊழியங்கள்–கனடா) அவர்கள், "நம்



சகோதரி **தெபொராள்**



சகோ. **ரூபன்**



சகோ. **ஜாண் பாலக்குமா**

நினைவுகளை அறிகிற கர்த்தர் நம் ஜெபத்திற்கு எவ்வாறு பதில் கொடுக்கிறார்?" என்பதைப் பற்றி வேத வசனத்தின் அடிப்படையில் தெளிவாக எடுத்துரைத்து, ஜெபத்தை ஏறெடுத்தபோது, ஜனங்கள் ஆசீர்வதிக்கப்பட்டனர். அற்புதங்களைப் பெற்றுக் கொண்ட ஜனங்களில் அனேகர் சாட்சி கூறி, கர்த்தருடைய நாமத்தை உயர்த்தி மகிழ்ந்தனர். தேவ நாமம் மகிமைப்பட்டது.

**– ஒருங்கிணைப்பாளர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திறப்பின் வாசல் ஜெபத்தில் இயேசு கிறிஸ்து செய்து வருகிற அற்புதங்களில் சில...

### ஜெபத்தைக் கேட்டார்!



என்னுடைய மகன்களுடைய தொழிலில் ஏற்பட்ட கடன் பிரச்சனைகளுக்காக திறப்பின் வாசல் ஜெபத்தில் தொடர்ந்து ஜெபம் செய்தேன். தற்பொழுது கடன்கள் படிப்படியாக குறைந்து கொண்டு வருவதோடு தேவன் தொழில்களையும் ஆசீர்வதிததிருக்கிறார். மற்றும் எங்களுடைய வீடு ஒன்றின் வழக்கு தொடரப்பட்டு அது நடைபெற அநேக தாமதங்கள் காணப்பட்டது அனாலும் தேவன் தடைகளை நீக்கிப் போட்டு வழக்கு நடைபெற கிருபை செய்தார். சகோ. ரட்ணம், கல்கிஸ்ஸ.

### ஊழியத்திற்கு அழைத்தார்!

கடந்த 11 வருடங்களாக, திறப்பின் வாசல் ஜெபத்தில் குடும்பமாகக் கலந்து கொள்கிறோம். என்னுடைய மகன் அந்த ஜெபத்தில் கலந்து கொண்டு வந்த சமயத்தில், கர்த்தர் அவனை தம்முடைய ஊழியத்திற்கு அழைத்திருப்பதாக கர்த்தருடைய ஊழியக்காரர் ஒருவர் மூலமாக தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்டது. ஆனாலும் அவன் கர்த்தருடைய வழிகளில் நடக்க விருப்பமில்லாமல், "நான் 18 வயதை அடையும்போது, என்னுடைய சுய விருப்பத்தின்படி நடந்து கொள்வேன்." என்று சொன்னான்.



நாங்கள் அவனுக்காக திறப்பின் வாசல் ஜெபத்தில் தொடர்ந்து ஜெபித்து வந்தோம். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு, அவனுடைய 22வது வயதில், வேலையை இராஜனாமா செய்து விட்டு, ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தின் ஊழியத்திற்குப் பொறுப்பாளராகக் கடந்து சென்று, ஊழியங்களை நிறைவேற்ற கர்த்தர் கிருபை செய்திருக்கிறார். - **லக்ஷீனி, நீர்கொழும்பு.**


கொழும்பில்
இயேசு விடுவிக்கிறார்

# திறப்பின் வாசல் ஜெபம்!

நாள்: 2018
**ஜனவரி 5**
(சனிக்கிழமை)
நேரம்: **காலை 9:00 - மதியம் 2:00.**

இடம்:
**Christ Church Hall, Galle Face,**
**(Near the Ramada Hotel.)**

தேவ செய்தியும், ஜெபமும்:
**'இயேசு விடுவிக்கிறார்' குழுவினர்.**

தேசத்திற்காக ஜெபிக்கவும், ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் வாருங்கள்!

நேரில் வர முடியாதவர்கள், உங்கள் தனிப்பட்ட, குடும்ப மற்றும் ஆவிக்குரிய பிரச்சனைகளுக்காக ஜெபிக்க வேண்டுமானால், கடிதம் மூலமாகத் தெரியப்படுத்தலாம். உங்களுக்காக ஜெபித்து, கர்த்தர் கொடுக்கும் பதிலை உங்களுக்கு அனுப்புவோம்.

**கர்த்தர் உங்கள் சிறையிருப்பை மாற்றுவார்.**

முகவரி: *57/36A, P.O. 108, Thimbirigasyaya Road, Hendala, Wattala, SRILANKA. Ph: 011-2930 152.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இயேசு விடுவிக்கிறார்'

திருகோணமலையில்

# கெத்செமனே ஜெப மையம்!

நாள்: ஒவ்வொரு செவ்வாய்கிழமையும்
காலை 9:30 - மதியம் 2:00 மணிவரை.

திறப்பின் வாசல் ஜெபம்
நடைபெறும்

## தேசத்திற்காக ஜெபிக்க வாருங்கள்!

Contact: 011-2930 152.

**ubamangala Wedding Hall,No:29,1st Floor,**
**Huskisan Street,Trincomalee.**

## ஜெபியுங்கள்! ஜெபியுங்கள்!

நாலுமாவடியில் 'இயேசு விடுவிக்கிறார்'

## 2019 புத்தாண்டு
# வாக்குத்தத்தக் கூட்டம்!

தேவனுடைய கூடாரம்,
நாலுமாவடி.

2019 ஜனவரி 1
(செவ்வாய்கிழமை)
மதியம் 1:00 - மாலை 5:00.

வாக்குத்தத்தச் செய்தி:

# சகோ. மோகன் சி. லாசரஸ்.

இணைய தளத்தில்

## நேரடி ஒளிபரப்பு!

(Webstreaming LIVE)
மதியம் 1:00 - மாலை 5:00.

புத்தாண்டின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள, கீழ்கண்ட இணைய தளங்களில் விஜயம் செய்க!

www.jesusredeems.com
www.jesusredeems.tv
www.comforter.tv

அதே நேரத்தில் Facebook மற்றும் Youtubeலும் ஒளிபரப்பப்படுகிறது.

YouTube f
jesusredeemsministries





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெத்செமனே
ஜெப மையம்
GETHSEMANE
PRAYER CENTRE

உங்கள் சிறையிருப்பு மாற வேண்டுமா?

# தேசத்திற்காக ஜெபிக்க வாருங்கள்!

தனியாக...
குழுவாக...
சபையாக...
ஜெபிக்கலாம்...

## வத்தளையில்

தினமும் காலை 9:00 மணிமுதல்,
மாலை 6:00 மணிவரை.

## நடைபெறும் ஊழிய விபரங்கள்

| பெண்கள் ஜெபம்! | உபவாச ஜெபம்! | குடும்ப ஆசீர்வாத கூடுகை! |
|---|---|---|
| (வியாழக்கிழமைதோறும்) | (சனிக்கிழமைதோறும்) | (ஒவ்வொரு மாதமும் போயா தினத்தன்று) |
| 10:00 A.M. - 1:00 P.M. | 10:00 A.M. - 1:00 P.M. | 10:00 A.M. - 1:00 P.M. |

சகோ. **மோகன் சி. லாசரஸ்** அவர்களின் தேவ செய்திகள் அடங்கிய சி.டி.க்கள், புத்தகங்கள் கிடைக்கும்.

கிளை அலுவலக முகவரி: *57/36A, P.O. 108, Thimbirigasyaya Road, Hendala, Wattala, SRILANKA.*
உங்கள் அவசர **ஜெப அழைப்பிற்கு 011 - 2930 152, 071 437 1111** என்ற எண்ணிற்குத் தொடர்பு கொள்ளவும்.

# எனக்காக வேண்டிக் கொள்ளுங்கள்!

| | | |
|---|---|---|
| 12 மணி நேர - பரிசுத்த உபவாச ஜெபம்! | அபுதாபி | 2018 டிசம்பர் 2 |
| எழுப்புதல் அக்கினி தோஹா | கத்தார்-தோஹா | 2018 டிசம்பர் 4,5,6 |
| 12 மணி நேர - முழு இரவு ஜெபம்! | கன்னியாகுமரி | 2019 ஜனவரி 4, 5 |
| திறப்பின் வாசல் உபவாச ஜெப முகாம்! | நாலுமாவடி | 2019 ஜனவரி 14, 15, 16 |





| | | |
|---|---|---|
| தேர்வு எழுதும் மாணவர்களுக்கான கூடுகை! | நாலுமாவடி | 2019 ஜனவரி 27 |
| | திருச்சி | 2019 ஜனவரி 6 |
| | பெரம்பலூர் | 2019 பிப்ரவரி 2 |

இந்த ஊழியங்களுக்காக

# ஜெபித்துக் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணத் தவறாதீர்கள்!

## தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்!



**ஏஞ்சல் டி.வியில்**

**சனிக் கிழமைதோறும் (காலை 7:30 - 8:00) -**

**'குடும்ப ஆசீர்வாத நேரம்!'**

**ஞாயிறுதோறும் (காலை 7:30- 8:00) -**

**'உங்கள் அற்புதத்தின் நேரம்!'**

**சுவர்க டி.வியில்**

ஞாயிறு முதல் வெள்ளி வரை காலை 7:30 - 8:00 மணிவரை.

பாடல்கள், நாடகங்கள், சாட்சிகள் மற்றும் பல... ஞாயிறு முதல் வெள்ளி வரை காலை 7:30 - 8:00 மணிவரை.

**Dialog TVயில்** (God Channel)

ஞாயிறு முதல் வெள்ளி வரை காலை 7:30 - 8:00 மணிவரை.



**சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்களின் தேவ செய்திகளைக் கேட்டு, ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்!

PRINTED BY S. A. PRINTERS, 57/3, LOTUS GROVE, THIMBIRIGASYAYE, HENDALA
Registered in the Department of Posts of Sri Lanka under QD/100/News/2018

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org